




# திருக்கோயில்

அக்டோபர் 1987, விலை ரூ. 2









மயிலைஅருள்மிகு கபாலீசுவரர் ஆலயத்தில் சிறப்பு வழிபாடு மற்றும் பொது விருந்து விழா சிறப்பாக நடைபெற்றது. மாண்புமிகு அறநிலையத்துறை அமைச்சர் திருமிகு வி. வி. சுவாமிநாதன் பி.எஸ்சி., பி. எல். இவ்விழாவில் கலந்து கொண்டு, அரசாங்க உதவித் தொகை பெறும் முதியோர் களுக்கு வேட்டி, சேலைகள் வழங்கினார்.

முகப்பு:

அருள்மிகு விநாயகர்

# திருக்கோயில்

இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை,
119, உத்தமர் காந்தி நெடுஞ்சாலை,
சென்னை — 600 043.
தொலைபேசி எண்: 8279407

ஆசிரியர்:
கவிஞர் டாக்டர் ந. அமிர்தலிங்கம், M.A., Ph.D.

| மாலை : 36 | திருவள்ளுவர் ஆண்டு 2025 பவ ஆண்டு புரட்டாசி 1994 செப்டம்பர் விலை ரூ. 3-00 | மணி: ୨ |
|---|---|---|

## திருக்கோயில் வாசகர்களுக்கு அறிவிப்பு

அன்பு வாசகர்களே! வணக்கம்.

திருக்கோயில் திங்கள் இதழின் உறுப்பினர் களாகச் சேர விருப்பம் உள்ளவர்கள்

உயர்திரு **ஆணையர்** அவர்கள்
இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை
சென்னை—600 034

என்ற முகவரிக்கு பணவிடை அல்லது வங்கி வரைவோலை மூலம் பணம் அனுப்பிச் சந்தாதாரராகச் சேர்ந்து கொள்ளலாம்.

### சந்தா விவரம்

| | | | |
|---|---|---|---|
| அரை ஆண்டு | — | ரூ. | 18-00 |
| ஓர் ஆண்டு | — | ரூ. | 36-00 |
| ஆயுள் | — | ரூ. | 300-00 |

சந்தாதாரர்கள் முழுமுகவரியைத் தெரிவிக்க வேண்டும்.
முகவரியில் மாற்றம் இருப்பின் உடனுக்குடன் தெரிவித்திடவும் வேண்டும்.

## பொருளடக்கம்

விநாயகர்
—ஸ்ரீசந்திரசேகரேந்திர சரசுவதிசுவாமிகள்

ஒரு காலப் பூசை
—கவிஞர் நெல்லை ஆ. கணபதி

நாலாயிரத் திவ்வியப் பிரபந்த நயவுரை
—டாக்டர் எஸ். ஜெகத்ரட்சகன்

பன்னிரு ஆழ்வார்கள்
—பருத்தியூர் டாக்டர் கே. சந்தானராமன்

பிள்ளையார்
—கோயிற்கலைச் செல்வர்
—தி. இராச மாணிக்கம்

வைணவப் பெரியோர்கள் பார்வையில் இராம காதை
—டாக்டர் தெ. ஞான சுந்தரம்.


சாதுவாய் நிற்கும் ஓர் சரித்திரம்.
—கவிஞர் சுவாதி.பி. காம்.

ஒன்றாம் பிறையா! மூன்றாம் பிறையா!
—சேது. சிவா

நாளும் இன்னிசையால் தமிழ்பரப்பும் ஞான சம்பந்தன்
—ச. முத்துசாமி எம்.ஏ,,


ஓங்கி உலகளந்த உத்தமன்
—அமரர் நா. வேணுகோபால் நாயகர்

இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை வெளியீடு



# விநாயகர்

தமிழ்நாட்டின் தனிப்பட்ட சிறப்பு எங்கு பார்த்தாலும், பிள்ளையார் கோயில்கள் இருப்பதேயாகும். 'கோயில்' என்று பெயர் வைத்து விமானமும் கூரையும் போட்டுக் கட்டிடம் எழுப்ப வேண்டும் என்பது கூட இல்லாமல்,





அமரர்

**ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரசுவதி சுவாமிகள்**


அரச மரத்தடிகளிலே கூட வானம் பார்க்க அமர்ந்திருக்கும் ஸ்வாமி நமது பிள்ளையார். தெருவுக்குத் தெரு ஒரு பிள்ளையார் கோயில், நதிக்கரைகளிளெல்லாம் பிள்ளையார், மரத்தடிகளில் பிள்ளையார் என்றிப்படி இந்தத் தமிழ் தேசம் முழுவதும் அவர் வேறெந்த ஸ்வாமிக்கும் இல்லாத அளவுக்கு இடம் கொண்டு அருள் பாலித்து வருகிறார். அவரைப் 'பிள்ளையார்' என்றே அன்போடு கூறுவது நம் தமிழ் நாட்டுக்கே உரிய வழக்கம். சர்வலோக மாதா பிதாக்களாகிய பார்வதி பரமேசுவரர்களில் ஜேஷ்ட புத்திரர் அவர். 'பிள்ளை' என்றால் அவரைத்தான் முதலில் சொல்ல வேண்டும், வெறுமே 'பிள்ளை' என்று சொல்லக்கூடாது என்பதால் மரியாதையாகப் 'பிள்ளையார்' என்று சொல்வது தமிழ் நாட்டுச் சிறப்பு.

'குமாரன்' என்றால் 'பிள்ளை' என்றே அர்த்தம், பாரததேசம் முழுவதிலும் குமாரன், குமாரஸ்வாமி என்றால் பார்வதி பரமேசுவரர்களின் இளைய பிள்ளையாகிய சுப்பிரமணியாரையே குறிப்பிடும். தமிழிலும் 'குமரக் கடவுள்' என்கிறோம். ஆனால் அவரைக் 'குமரனார்' என்பதில்லை; 'குமரன்' என்று தான் சொல்வார்கள். மூத்த பிள்ளைக்கே மரியாதை தோன்றப் பிள்ளையார் என்று பெயர் தந்திருக்கிறோம்.

முதல் பிள்ளை இவர்; குழந்தைஸ்வாமி; ஆனாலும் இவரே எல்லாவற்றுக்கும் ஆதியில் இருந்தவர். பிரணவம்தான் எல்லாவற்றுக்கும்



முதல். பிரணவத்திலிருந்து தான் சகல பிரபஞ்சமும் ஜீவராசிகளும் தோன்றின. அந்தப் பிரணவத்தின் ஸ்வரூபமேபிள்ளையார்; அவரது ஆனைமுகம். வளைந்த தும்பிக்கை இவற்றைச் சேர்த்துப் பார்த்தால் பிரணவத்தின் வடிவமாகவே தோன்றும்.

குழந்தையாக இருந்து கொண்டே ஆதி முதலின் தோற்றமாக இருக்கிற பிள்ளையார் குழந்தை போல் தோன்றினாலும் பக்தர்களை ஒரேயடியாகக் கைதூக்கி உயர்த்தி விடுவதிலும் முதல்வராக இருக்கிறார். ஔவைப்பாட்டி ஒருத்தியின் உதாரணமேபோதும். ஔவையார் பெரிய கணபதி உபாசகி. பிரணவ ஸ்வரூபியான விநாயகரை புருவ மத்தியில் தியானித்து கொண்டு ஔவையார் யோக சாஸ்திரம் முழுவதையும் அடக்கியதான 'விநாயகர்' அகவலை பாடியிருக்கிறாள். அதைப் பாராயணம் செய்தால் பரமஞானம் உண்டாகும். இந்த ஔவையாரைப் பற்றி ஒரு கதை உண்டு. சுந்தரமூர்த்தி ஸ்வாமிகளும் சேரமான் பெருமாள் நாயனாரும் கைலாசத்துக்கு புறப்பட்டார்கள். அவர்கள் ஔவையையும் உடன் அழைத்துப் போக எண்ணினார்கள். அப்போது ஔவை விக்நேசுவரருக்கு பூஜைப் பண்ணி கொண்டிருந்தாள். சீக்கிரம் பூஜையை முடித்துத் தங்களுடன் கைலாசத்துக்கு வருமாறு சுந்தரமூர்த்தியும் சேரமானும் அவரை அவசரப் படுத்தி அழைத்தார்கள். அவரோ 'நீங்கள் போகிறபடி போங்கள். உங்களுக்காக நான் என் பூஜையை வேகப்படுத்த மாட்டேன். விநாயக பூஜையே எனக்குக் கைலாசம்' என்று சொல்லி விட்டாள். அவர்கள் அப்படியே கிளம்பி விட்டார்கள். ஔவை சாங்கோபாங்கமாகப் பூஜை செய்து முடித்தாள். முடிவில் பிள்ளையார் பிரசன்னமாகி அவளை அப்படியே தம் துதிக்கையால் தூக்கி ஒரே வீச்சில் கைலாசத்தில் கொண்டு சேர்த்து விட்டார். அவருக்குப் பிற்பாடுதான் சுந்தரமூர்த்தியும் சேரமான் பெருமாளும் கைலாசத்தை அடைந்தார்கள். அங்கே சேரமான் பெருமாள் திருக்கைலாய ஞான உலாவைப் பாடினார். இதை அருணகிரிநாதர் திருப்புகழில்

''ஆதரம் பயில் ஆரூரர் தோழமை
சேர்தல் கொண்டவரோடே முனாளினில்
ஆடல் வெம்பரி மீதேறி மா கயிலையிலேகி
ஆதி அந்த உலா ஆசு பாடிய
சேரர்......''

என்பதில் சொல்லாமல் சொல்கிறார். 'அப்படி பட்ட சேரர் ஆண்ட கொங்கு தேசத்தில்உள்ள பழனியில் இருக்கிற பெருமானே' என்று பழனி ஆண்டவனைப் பாடுகிறார். சுந்தரரும், சேரமான் பெருமாள் நாயனாரும் கைலாசம் சேர்ந்ததற்கு இப்படி குமாரஸ்வாமியின் சம்பந்தத்தை உண்டாக்குகிறார். மூத்த குமாரரான பிள்ளையாருக்கோ ஏற்கனவே அந்த சம்பவத்தில் சம்பந்தம் இருக்கிறது. அந்த இரண்டு பேருக்கும் முன்னதாக, ஒரு சொடுக்கு போடுகிற நாழிகைக்குள் அவர் ஔவைப் பாட்டியைக் கைலாசத்தில் சேர்த்து விட்டார். பெரிய அநுக்கிரகத்தை அநாயாசமாகச் செய் கிற ஸ்வாமி விக்நேசுவரர்.

நன்றி : 'தெய்வத்தின் குரல்'

# ஒரு காலப் பூசை!

## கவிஞர் நெல்லை ஆ. கணபதி

எத்தனையோ கோயிலம்மா! எங்கதமிழ் நாட்டில்!
எங்கமுன்னோர் கட்டிவைத்தார்! கடவுள்வழி பாட்டில்!
நித்தியமும் ஆறுகாலப் பூசைசெய்த நாடு!
நின்றதம்மா இடையினிலே ஏதோசாபக் கேடு!
அத்தனையும் ஆய்ந்துமீண்டும் ஆலயங்கள் காண .
ஆக்கியுள்ளார் புதிய திட்டம் நாம்மகிழ்ந்து பேண.
நித்தமொரு காலமேனும் பூசை செய்யும் திட்டம்
நின்று தெய்வம் காக்கும்! என்று வாழ்த்தவந்த திட்டம்!
(எத்தனையோ)

தெய்வத்தமிழ் நாடு என்று மகிழ்ந்துபோற்றி வாழ்ந்தோம்!
திருச்செந்தில் மதுரை தில்லை திருவரங்கம் சூழ்ந்தோம்
வையமெலாம் தேடிவந்து நமதுகோயில் கண்டார்
வானளாவும் கோபுரங்கள் கண்டு உவகை கொண்டார்
கொய்தமலர் மாலைசூடி ஆறுகாலப் பூசை
குறைபடாமல் மேளதாளம் கொட்டு மணி ஓசை
செய்துதினம் வணங்குகையில் தேனிசைதே வாரம்
திகழ வழி பாடுசெய்தே சூட்டிநிற்பார் ஆரம்
(எத்தனையோ)

மன்னராட்சி மாற்றியநாம் மக்களாட்சி கண்டோம்
மாலைமரி யாதையெலாம் நமக்குநாமே கொண்டோம்:
சின்னஞ்சிறு கோயில்களோ செல்வவளம் இன்றி
சிதைந்ததம்மா விளக்குஏற்றி வைக்கவழி இன்றி
அந்தநிலை மாற்றஇன்று ஆணைவந்த தம்மா
அருள்பெருக்க இருள்அகற்ற ஆசிதந்த தம்மா!
சின்னதொரு விளக்குவைத்தால் செல்வவளம் ஓங்கும்
தெய்வபக்தி ஓங்கவைத்தால் தேசநலம் ஓங்கும்
(எத்தனையோ)



குழந்தைகளும் தெய்வமுமே கொண்டாடும் இடத்தில்
குதூகலமே நிலைத்துநிற்கும் நாமும் அந்தத் தடத்தில்
இழந்தபுகழ் மீட்டிவரும் ஒருகாலப் பூசை
இருளடைந்த கோவிலெலாம் நீக்கிவிடும் மாசை
பழந்தமிழ்நா(டு) ஆண்டவர்க்கோ கோவில்களே எண்ணம்
பைந்தமிழர் நாட்டிலின்றோ கோபுரமே சின்னம்
அழிந்துஉருகக் குலைந்துபோன கோவிலெல்லாம் வாழும்
அன்னைபுகழ் பூசைமணி யோசையெலாம் சூழும்
(எத்தனையோ)

ஒருகாலம் ஆறுகாலப் பூசைசெய்த கோயில்
ஒருக்காலும் பூசைஇன்றிச் சிதைந்ததேனோ நோயில்
வருமானம் இன்றிப்பூசை ஏதுமின்றி இன்று
வாட்டமுறும் நிலைஇன்றிப் பாதுகாக்க அன்று
பெரும்சொத்து எழுதிவைத்தார் கட்டிவைத்த முன்னோர்
பின்னாளில் அதில்வருவாய் இல்லைஎன்று சொன்னார்
ஒருகாலப் பூசைஇன்று கண்டுமனம் மகிழ்வார்
உவகையுடன் வாழ்த்துரைத்துப் போற்றிநெஞ்சம் நெகிழ்வார்
(எத்தனையோ)

கோவில்மணி ஒலிக்க வேண்டும் நாளும்பூசை நேரம்
கும்பிட்டுநாம் பாடவேண்டும் அப்பரின்தே வாரம்
நாவிலெழும் இன்னிசையால் தீமைகளை வீரம்
நாளும்வென்று நன்மைகாணப் பூசைதரும் தீரம்
தேவிஅருள் மேவிஅது தேசமெல்லாம் சேரும்
ஜெயம்உண்டு பயமில்லை என்றுஇனிது கூறும்
ஆவிஉடல்பொருளனைத்தும் நாட்டுநலன் ஊறும்
அன்னைபுகழ் வாழ்க என்று வாழ்த்துரைப்போம் வாரும்
(எத்தனையோ)



# ஸ்ரீ நாலாயிர திவ்யப்பிரபந்தம்

## நயவுரை

டாக்டர் ஜெகத்ரட்சகன்



### தளர்நடைப் பருவம்:

தொடர் சங்கிலிகை சலார்-பிலார் என்னத்
 தூங்கு பொன்மணி ஒலிப்பப்
படு மும்மதப் புனல் சோர வாரணம்
 பையநின்று ஊர்வது போல்
உடன் கூடிக் கிண்கிணி ஆரவாரிப்ப
 உடை மணி பறை கறங்க
தடந் தாளிணை கொண்டு சார்ங்கபாணி
 தளர்நடை நடவானோ 86

ஒரு யானை மத மிகுதியால் கட்டுத் தறியை முரித்து சங்கிலியை இழுத்து நடக்கையில் அத்தொடர் சலார் பிலாரென்று ஒலிக்கவும், பொன் கயிற்றிற் கட்டித் தொங்கிடும் மணிகள் ஒலிக்கவும், மும்மதநீர் பெருகவும் மெல்ல நடந்து போதல்போல, கண்ணன் தளர்நடை நடக்கையில் காலில் சதங்கை கிண்கிண் என்று ஒலிக்கவும், அரையில் கட்டிய சிறுமணிகள், பறைபோல ஒலிக்கவும், நடைக் களைப்பால் வில்லைக் கையிலேந்திய பிள்ளை தன் பெரிய கால்கள் இரண்டினால் இளநடையை நடக்க மாட்டானோ?

செக்கரிடை நுனிக்கொம்பிற் தோன்றும்
 சிறுபிறை முளைப் போல
நக்க செந் துவர்வாய்த் திண்ணை மீதே
 நளிர் வெண்பல் முளை இலக
அக்குவடம் உடுத்து ஆமைத்தாலி
 பூண்ட அனந்தசயனன்
தக்க மா மணிவண்ணன் வாசுதேவன்
 தளர்நடை நடவானோ

செவ்வானின் கிளைமுனையிலே தோன்றும் இளம்பிறை முளைப் போல் சிரித்தலால், மிகவும் சிவந்த வாயின் மேட்டில் குளிர்ந்த வெண்பல்லின் முளைகள் விளங்க, சங்குணி வடத்தைத் திருவரையில் தரித்து ஆமை வடிவத் தாலியைக் கழுத்தில் அணிந்து, திருவனந்தாழ்வானைப் படுக்கையாயுடைய தகுதியான நீலமணி போன்ற நிறத்தான், வசு தேவன் மகனுமான இவன் தளிர்நடை நடவானோ.

6

மின்னுக் கொடியும் ஓர் வெண் திங்களும்
 சூழ் பரிவேடமுமாய்ப்
பின்னற் துலங்கும் அரசிலையும்
 பீதகச் சிற்றாடையொடும்
மின்னிற் பொலிந்த ஓர் கார்முகில் போலக்
 கழுத்தினிற் காறையொடும்
தன்னிற் பொலிந்த இருடிகேசன்
 தளர்நடை நடவானோ, 88

மின்னற் கொடியும், களங்கமில்லாத முழு வெண்ணிலவும் அவ்இரண்டைச் சூழ்ந்திருக்கும் ஒளியும் போலே திருவரையிற் பொற் பின்னலும், கோவைப்பட்ட அரசிலை அணிதலானும் இவற்றுக்கு மேலே சூழப் பொன்னின் 'சிற்றாடையும், மின்னலினால் விளங்கும் கருமுகில் போலே கழுத்தில் அணிந்துள்ள காறையோடும் இவ்வணிகள் மிகை என்னும் படி இயல்பாகப் பேரழகை உடையவனாய், கண்டவர்கள் பலன்களைத் தன் வயமாக்கிக் கொள்ளுமவன் தளர்நடை நடவானோ.

கன்னற் குடம் திறந்தால் ஒத்து ஊறிக்
 கணகண சிரித்து உவந்து
முன் வந்து நின்று முத்தம் தரும் என்
 முகில்வண்ணன் திருமார்வன்
தன்னைப் பெற்றேற்குத் தன்வாய் அமுதம்
 தந்து என்னைத் தளிர்ப்பிக்கின்றான்;
தன் எற்றுமாற்றலர் தலைகள் மீதே
 தளர்நடை நடவானோ. 89

நிறைகுடப் பொள்ளல் வழியாகக் கருப்பஞ்சாறு பொசிவதைப் போல், வாயில் நீர் சுரந்து கணகண வென்று ஒலிவுண்டாகும்படி சிரித்துக் களித்து என் முன்னே வந்து எனக்கு முத்தம் கொடுப்பவன், அன்பனாய், கார்முகில் போல் வடிவையுடையவனாய், திருமகள் உறையும் மார்பையுடைய கண்ணனைப் பெற்ற எனக்குத் தன்வாயில் ஊறும் அமிழ்தம் கொடுத்துத், தன்னைப் பிள்ளையாகப்பெற்ற பேற்றால் என்னைத் தழைக்கச் செய்கின்றான். இவன் தன்னோடு எதிரும் பகைவர்களின் தலைகளின் மீதே அடியிட்டுத் தளர்நடை நடவானோ?

முன்நல் ஓர் வெள்ளிப் பெருமலைக் குட்டன்
மொடுமொடு விரைந்து ஓடப்
பின்னைத் தொடர்ந்தது ஓர் கருமலைக்
குட்டன்
பெயர்ந்து அடியிடுவது போல்
பன்னி உலகம் பரவி ஓவாப் புகழ்ப்
பலதேவன் என்னும்
தன்நம்பி ஊடப் பின் கூடச் செல்வான்
தளர்நடை நடவானோ 90

முன்னே வெள்ளிமயமான பெரிய மலை ஈன்ற குட்டியானது திடுதிடுவென்று விரைவாக ஓட அதன் பின்னே தன் செருக்கால் குட்டியை பிடிக்க ஒப்பில் கரிய மலையொன்று ஈன்ற குட்டி தான் இருக்குமிடத்தை விட்டுப் புறப் பட்டு அடியிட்டுப் போவதுபோல், உலகங்க களெல்லாம் கூடி ஆய்ந்து வழிபட்டதாலும், முடிவு காண முடியாத புகழையுடைய பல ராமன், தன் தமையன் முன்னே ஓடிக்கொண் டிருக்கப் பின்னே அவனைச் சேர வேண்டு மென்று செல்பவனான கண்ணன் தளர்நடை நடவானோ?

ஒரு காலிற் சங்கு ஒரு காலிற் சக்கரம்
உள்ளடி பொறித்து அமைந்த
இரு காலுங் கொண்டு அங்கு அங்கு எழுதினாற்
போல்
இலச்சினை பட நடந்து
பெருகாநின்ற இன்ப வெள்ளத்தின்மேல்
பின்னையும் பெய்து பெய்து
தரு கார்க் கடல்வண்ணன் காமர் தாதை
தளர்நடை நடவானோ 91

ஓர் உள்ளங்காலில் சங்கும், மற்ற உள்ளங் காலில் ஆழியும் வரிகளாக விளங்குகிற இரண்டு திருவடிகளையும் கொண்டு, அடி வைத்த அவ் இடங்களிலே சித்தரித்தது போலே அடையாள முண்டாகும்படி அடி வைத்து நடந்து தனது வடிவழகையும் நடையழகையும் கண்டு மேன் மேலும் பொங்குகிற மகிழ்ச்சிக் கடலுக்கு மேலே, பின்னும் மேலும் மேலும் மகிழ்ச்சி கொண்டு தளர்நடை நடவானோ.

படர் பங்கைய மலர்வாய் நெகிழப்
பனிபடு சிறுதுளி போல்
இடங் கொண்ட செவ்வாய் ஊறி ஊறி
இற்று இற்று வீழநின்று
கடுஞ்சேக் கழுத்தின் மணிக்குரல் போல்
உடைமணி கணகணென
தடந் தாளிணை கொண்டு சார்ங்கபாணி
தளர்நடை நடவானோ...

படர்ந்த தாமரை மொட்டாயிராமல் வாய் திறந்து மலர, அதில் நின்று பெருகும் குளிர்ச்சியான தேனின் சிறு துளியைப் போலே நீர் இடைவிடாமற் சுரந்து நடுவே முறிந்து முறிந்து கீழே விழும்படி, துடுக்குடைய காளை யின் கழுத்து மணியின் ஓசை போலே தன் திருவரையிற் கட்டிய மணி கணகணவென்று ஒலிக்க, அகன்று ஒன்றுக்கொன்று ஒத்திருக்கும் திருவடிகளைக் கொண்டு சாரங்கவில்லைத் திருக்கையிலே உடையவன் தளர்நடை நட வானோ.



பக்கம் கருஞ் சிறுப்பாறை மீதே
அருவிகள் பகந்தனைய
அக்குவடம் இழிந்து ஏறித் தாழ
அணிஅல்குல் புடை பெயர
மக்கள் உலகினிற் பெய்து அறியா
மணிக் குழலி உருவின்
தக்க மா மணிவண்ணன் வாசுதேவன்
தளர்நடை நடவானோ. 93

கருநிறமான சிறிய மலையின் பக்கத்திலே மேடுபள்ளமுமான இடங்களிற் பாய்கிற நீர ருவிகள் ஒலிப்பதைப் போல திருவரையிற் சாத்திய சங்கு மணி வடம் உயர்ந்தும் தாழ்ந் தும் ஒளிரும்படி, அழகிய பட்டம் பக்கலிலே அசைய உலகத்திலுள்ள மனிதர் பெற்றறியாத அழகிய குழந்தை வடிவமுடைய தகுதியான நீலமணி போன்ற நிறமுடைய வாசுதேவர் மகன் தளர்நடை நடவானோ.

வெண் புழுதிமேற் பெய்துகொண்டு
அளைந்தது ஓர்
வேழத்தின் கருங்கன்றுபோல்
தெண்புழுதியாடி திரிவிக்கிரமன்
சிறுபுகர்பட வியர்த்து
ஒண்போது அலர் கமலச் சிறுக்கால் உறைத்து
ஒன்றும் நோவாமே
தண்போது கொண்ட தவசின் மீதே
தளர்நடை நடவானோ

வெண் புழுதியை மேலே நிறைத்துக் கொண்டு அளைந்த ஒரு கரிய யானைக்கன்று போலே உலகெல்லாம் மூன்றடி யாலே அளந்த இறைவன் கண்ணன், தெள்ளிய புழுதியிலே விளையாடி சிறிய வனப்புண்டாக வேர்த்துப் போய் உரிய காலத்திலே மலர்ந்த அழகிய தாமரைப்பூவை ஒத்த சிறிய பாதங்கள் ஏதேனும் ஒன்று உறுத்த அதனாலே சிறிதும் நோவாதபடி குளிர்ந்த மலர்களுடைய மெத்தையின் மேலே தளர்நடை நடவானோ.

திரை நீர்ச் சந்திர மண்டலம் போலச்
  செங்கண்மால் கேசவன்தன்
திரு நீர் முகத்துத் துலங்கு சுட்டி
  திகழ்ந்து எங்கும் புடைபெயர
பெரு நீர்திரை எழு கங்கையிலும்
  பெரியதோர் தீர்த்த பலம்
ஒரு நீர்ச் சிறுச்சண்ணம் துள்ளம் சோரத்
  தளர்நடை நடவானோ.

அலைகடலின் நடுவிலே அசைந்து தோன்றும் மதி மண்டலம் போல சிவந்த கண்களையும் கருநிறத்தையுமுடைய அவனுடையஅழகிய ஒளியையுடைய திருமுகத்திலே விளங்குகின்ற சுட்டியானது எல்லா இடத்திலும் ஒளி வீசி இடவலமாக அசையவும், சிறந்ததாய், வெள்ளம் மாறாமல் அலை எறிகின்ற கங்கையைக் காட்டிலும் ஒப்பற்றதான பயன் கொடுக்கக் கூடிய நீரையுடைய சிறிய ஆண்குறி துளித் துளியாகச்சொட்டவும் தளர்நடைநடவானோ.

ஆயர் குலத்தினில் வந்து தோன்றிய
  அஞ்சன வண்ணன் தன்னைத்
தாயர் மகிழ ஒண்கால் தளரத்
  தளர்நடை நடந்ததனை
வேயர் புகழ் விட்டுசித்தன் சீரால்
  விரித்தன உரைக்கவல்லார்
மாயன் மணிவண்ணன் தாள் பணியும்
  மக்களைப் பெறுவர்களே 96

இடைக் குலத்திலே வந்து அவதரித்த கருநிறமுடையவனான கண்ணனைக் கண்டு தாய்மார்கள் மனம் மகிழவும் வணங்கார் வருத்தமடைய தளர்நடை நடந்ததைப் பெரியாழ்வார் சிறப்பாக விரித்த பாசுரங்களைச் சொல்ல வல்லவர்கள், எம்பெருமானுடைய திருவடிகளை வணங்கவல்ல பிள்ளைகளைப் பெறுவார்கள்.

## அச்சோப் பருவம்

பொன் இயல் கிண்கிணி சுட்டி புறங் கட்டித்
தன் இயல் ஓசை சலன்-சலன் என்றிட
பின் இயல் மேகம் விரைந்து எதிர் வந்தாற்
  போல்
மின் இடைக்கு ஒட்டரா, அச்சோ, அச்சோ
எம்பெருமான் வாராய், அச்சோ அச்சோ....97

தங்கத்தால் அரைச் சதங்கை பாதச் சதங்கைகளையும் சுட்டியையும் அதற்குரிய இடத்திலே அணிந்து, சதங்கை ஒலி, சலன் சலனென்று ஒலிக்க, மின்னலுடன் பொருந்திய முகில் விரைவாய் ஓடி எதிரே வந்தாற்போலே என் இடையிலே இருக்க விரும்பி ஓடிவந்து என்னை அணைத்துக் கொள், பிணைத்துக் கொள், இறைவனே அணைத்துக் கொள்வாய்.

செங்கமலப் பூவிற் தேன் உண்ணும் வண்டே
  போல்
பங்கிகள் வந்து உன் பவளவாய் மொய்ப்ப
சங்கு வில்வாள் தண்டு சக்கரம் ஏந்திய
அங்கைகளாலே வந்து அச்சோ; அச்சோ
  ஆரத் தழுவாய் வந்து அச்சோ அச்சோ
  98.

தாமரைப் பூவில் தேனைக் குடிக்க மொய்க்கின்ற வண்டுகளைப் போல் உனது குண்டல மயிர்கள் வந்து பவளம் போற் செந்நிறமான உனது வாயில் மொய்த்துக் கொள்ளும்படி ஓடிவந்து, ஐம்படைகளையும் தாங்கி, அழகிய கைகள் விரிய ஓடி வந்து நெஞ்சார அணைத்துக் கொள்வாய்.

பஞ்சவர் தூதனாய்ப் பாரதம் கைசெய்து
நஞ்சு உமிழ் நாகம் கிடந்த நற் பொய்கை
  புக்கு
அஞ்சப் பணத்தின்மேல் பாய்ந்திட்டு அருள்
  செய்த
அஞ்சனவண்ணனே அச்சோ அச்சோ
  ஆயர் பெருமானே அச்சோ அச்சோ.99

பாண்டவர்களுக்காகத் தூதனாய்ச் சென்றும், பாரதப் போரை அணிவகுத்தும், ஐந்தலைய பைந்நாகத் தலைப் பாய்ந்து படத்திலே குதித்தாடி, அக்காளியனை இளைப்பித்து அருளால் விட்டிட்ட கரிய திருமேனியையுடையவனே அச்சோ அச்சோ, ஆயர் பெருமானான நீர்மையுடையவனே அணைத்துக் கொள்வாய்.

நாறிய சாந்தம் நமக்கு இறை நல்கு என்னத்
தேறி அவளும் திருவுடம்பிற் பூச
ஊறிய கூனினை உள்ளே ஒடுங்க அன்று
ஏற உருவினாய் அச்சோ அச்சோ
  எம்பெருமான் வாராய்; அச்சோ, அச்சோ
  100

சாந்துப் பொருள்களை நம் மேனியிலே பூசிக் கொள்ள இறைவனே நீ அருள வேண்டுமென்று வேண்டிக் கொள்ள, அவனும் நல்க, அதனை மேனி முழுவதும் பூசிவிட கூனை நிமிர்த்துவதற்காக அன்று அம்பை உருவியவனே! வருகை தந்து அணைத்துக் கொள்வாய்.

கழல் மன்னர் சூழக் கதிர் போல் விளங்கி
எழலுற்று மீண்டே இருந்து உன்னை நோக்கும்
கழலை பெரிது உடை துச்சோதனனை
அழல விழித்தானே அச்சோ அச்சோ
  ஆழி அங்கையனே அச்சோ, அச்சோ....101

வீரக்கழல் அணிந்தமன்னர் சுற்றியிருக்க அவர் நடுவில் அரியணையில் பரிதிபோல் விளங்கி, 'கண்ணன் வந்தால் ஒருவரும் எழக் கூடாது' என்று ஆணையிட்டிருக்க, நீ சபையினுள் வர எல்லா அரசரும் எழுந்து வணங்கவும், உன்னைக் கொல்ல நினைத்த துரியோதனனை, உள்ளச் சீற்றமெல்லாம் பார்வையில்

தோற்றும்படி கடுமையாகப் பார்த்தவனே அச்சோ அச்சோ! ஆழியை ஏந்தியவனே வந்தணைத்துக் கொள்வாய்.

போர் ஒக்கப் பண்ணி இப்பூமிப் பொறை
தீர்ப்பான்
தேர் ஒக்க ஊர்ந்தாய் செழுந்தார் விசயற்காய்;
கார் ஒக்கு மேனிக் கரும் பெருங் கண்ணனே
ஆரத் தழுவாய் வந்து அச்சோ அச்சோ
ஆயர்கள் போரேறே அச்சோ அச்சோ..102

இந்நிலச்சுமை தீர்ப்பதற்குப் போருக்கும் வெற்றிக்கும் சூடும் மாலைகளையுடைய அருச்சுனனுக்காகத் தேரைச் செலுத்தினவனே! மழைக்கால முகில்போல் திருமேனியும் கரிய பரந்த கண்களையுமுடையவனே! ஓடி வந்து நன்றாக என்னைத் தழுவிக்கொள்வாய்அச்சோ அச்சோ, இடையர்களுக்கு அடங்கி நிற்கின்ற போர் செய்யுந் தன்மையுள்ள காளையே அணைத்துக் கொள்வாய்.

மிக்க பெரும்புகழ் மாவலி வேள்வியிற்
தக்க இது அன்று என்று தானம் விலக்கிய
சுக்கிரன் கண்களைத் துரும்பாற் கிளறிய
சக்கரக் கையனே; அச்சோ; அச்சோ;
சங்கம் இடத்தானே; அச்சோ; அச்சோ..103

வள்ளன்மையால் புகழ் கொண்ட மாவலி, வாமனன் கேட்டதைக் கொடுக்க முயல்கையில், மாவலியின் குருவான வெள்ளி தடுக்க, மாவலி கேட்காமல் நிலக் கொடை தந்தபோது வெள்ளி ஒரு வண்டு வடிவமாய், குண்டிகையின் வாய் அடைக்க, வாமனன் தனது தருப்பை நுனியால் அத்துளையைக் குத்த அவ்வெள்ளியின் விழியைக் கலக்கிய திருவாழி வலக்கையில் கொண்டவனே! அச்சோ, அச்சோ, இடக்கையில் சங்கேந்தியவனே, அணைத்துக் கொள்வாய்.

என் இது மாயம்! என் அப்பன் அறிந்திலன்;
முன்னையவண்ணமே கொண்டு அளவாய்என்ன
மன்று நமுசியை வானிற் கழற்றிய
மின்ற முடியனே அச்சோ; அச்சோ
வேங்கடவாணனே அச்சோ; அச்சோ..104

கொடை ஏற்கும் தன் கையில் நீர் விழுந்ததும், மூவுலகளக்க வாமனன் வளர்ந்துஅளக்கப் புகும்போது மாவலி பிள்ளை நமுசி ஓடிவந்து 'இது என்ன மாயம்!' முதலில் வந்த வடிவோடே அளப்பாய் என்று நமுசி சொல்ல, 'முன் வடிவுடன் அளக்க முடியாது' என்று நமுசியை வானில் சுழற்றி விட்ட ஒளி பெருகு முடியனே அச்சோ அச்சோ! திருமலையிலே வாழ்பவ அணைத்துக் கொள்வாய்.

கண்ட கடலும் மலையும் உலகு ஏழும்
முண்டத்துக்கு ஆற்றா, முகில்வண்ணா ஓஎன்று
இண்டைச் சடைமுடி ஈசன் இரக்கொள்ள
மண்டை நிறைத்தானே அச்சோ அச்சோ
மார்வில் மறுவனே! அச்சோ அச்சோ! 105

கபாலம் ஏந்திய சிவன் கடல்களை, மலைகளை, ஏழு உலகங்களை இட்டுக் கபாலத்தை நிறைக்கப் பார்த்தால் அக்கபாலத்துக்குப் போராது நின்றான். சடைமுடிச் சிவன் பிச்சையெடுக்க, அவன் கையிலிருந்த தலை வெடிக்கும்



படி மார்பிலிருந்து குருதி நிறையச் செய்தவனே! அணைத்துக் கொள்வாய்! மார்பில் மச்சத்தை உடையவனே அணைத்துக் கொள்வாய்.

துன்னியபேரிருள் சூழ்ந்து உலகை மூட
மன்னிய நான்மறை முற்றும் மறைந்திடப்
பின் இவ்உலகினில் பேரிருள் நீங்க அன்று
அன்னமது ஆனானே; அச்சோ அச்சோ
அருமறை தந்தானே அச்சோ அச்சோ
106


நெருங்கிய இருள் பரவி, உலகங்களை மறைத்துக் கொள்ள, அப்போது வேதங்கள் இல்லாமையால் கண் இழந்தோம்; பொருள் இழந்தோம் என்று தேவர்கள் கதறினர், பின் அறியாமை பேரிருள் நீங்கும்படி மறைந்த வேதங்களைப் பிரமனுக்கு ஓதுவதற்காக அன்னமாய் வந்துதோன்றியவனே அணைத்துக் கொள். அருமை மறைகளை உதவியவனே அணைத்துக் கொள்.

நச்சுவார் முன் நிற்கும் நாராயணன் தன்னை
அச்சோ வருக என்று ஆய்ச்சி உரைத்தன
மச்சு அணி மாடப் புதுவைக்கோன் பட்டன்
சொல்
நிச்சலும் பாடுவார் நீள் விசும்பு ஆள்வரே 107

தன்னை விரும்புபவர்களது முன்னே வந்து நிற்கும் நாராயணனை இடைக் குலத்தவளான யசோதை அணைத்து விருப்பால் அச்சோ அணைப்பாயாக என்று சொன்னவற்றை பெரியாழ்வார் சொன்ன பாசுரங்களைப் பாடுவார் பரமபதத்திற்குத் தலைவராவர்.

(தொடரும்)

# பன்னிரு ஆழ்வார்கள்



பருத்தியூர்
டாக்டர் கே. சந்தானராமன்

**திருப்பாணாழ்வார்**

சோழநாட்டில் உறையூரில் கார்த்திகை மாதத்து ரோகிணி நட்சத்திரத்தில் திருப்பாணாழ்வார் அவதரித்தார். திருமாலின் ஸ்ரீ ஸ்ரீவத்ஸத்தின் அம்சமாகத் தோன்றியவர் இவர். கழனி வெளியில் நெற்பயிரிடையே இவரது அவதாரம் நிகழ்ந்தது

யாழிசைக்கும் பாணர் குலத்தைச்சேர்ந்த ஒருவர் இவ்வருங் குழந்தையைக்கண்டெடுத்து வளர்த்தார். அதனால் இவர் திருப்பாணாழ்வார் என்று திருப்பெயர் பெற்றார். பாணர் வீட்டில் பால் முதலான சத்துவம் மிக்க உணவுகளையே உண்டுவந்தார். பாணர் குலத்துக்குரிய யாழிசையில் சிறந்த தேர்ச்சி பெற்றார். அவ்விசையை அச்சுதனுக்கே அர்ப்பணிக்கும் திருமாலடியாராக உருவாகிவிட்டார். சேனை முதலியார் இரகசியமாக எழுந்தருளி திருவிலச்சினை முதலியன கொடுத்து இவரைப் பூரண வைணவராக்கினார்.

திருவரங்கத்துப் பெருமானிடம் பக்தி மேலிட்டுத் திருப்பாணாழ்வார் நாள்தோறும் வைகலில் துயிலெழுந்து சென்று காவிரிக் கரையை அடைவார். தமது குலப்பிறப்பு கருதி இவர் திருவரங்கன் கோயில் வாசலையும் மிதிக்க அஞ்சினார். காவிரியின் தென்கரையில் நின்றுஅரங்கன் சந்நிதானத்தைப் பார்த்தவாறு உள்ளம் உருக அவன் புகழை யாழில் இசைத்து மகிழ்வார். . பாணரின் இசை காவிரிக் கரை எங்கும் கலந்து கேட்போர் செவிகளையும், உள்ளத்தையும் குளிர்வித்தது.

லோகசாரங்கர் என்ற வேதியர் திருவரங்கம் திருக்கோயிலுக்குத் திருமஞ்சன நீர் எடுத்துக் கொடுக்கும் தொண்டு புரிந்து வந்தார். அவர் ஒருநாள் அபிஷேகத்துக்காகக் காவிரிநீர் எடுக்க வந்த பொழுது பாணரைக் கண்டார். அவரது சாதியை நோக்கி உள்ளன்பை உணராத லோகசாரங்கர் பாணரைத் 'தள்ளிப்போ' என்றார். தம்மையே மறந்து யாழிசை பொழிந்து கொண்டிருந்த பாணரின் செவியில் வேதியர் கூறியது விழவே இல்லை. லோகசாரங்கரும் வேறு சிலரும் பலமுறை கூறியும் தன்னிடத்திலிருந்து சற்றும் அசையாது நின்று அரங்கனை இசையால் திருமஞ்சனம் ஆட்டிக் கொண்டிருந்தார் பாணர்.

அதனால் வெகுண்ட லோகசாரங்கரும் மற்றவர்களும் பாணரைக் கற்களால் தாக்கித் துன்புறுத்தினர். கல்லடியினால் அவரது நெற்றியிலிருந்துசெங்குருதி பெருக்கெடுத்தது. அப்போதும் அவரது இசைத் திருமஞ்சனம் நிற்கவில்லை.

திருக்கோயில் திரும்பி, காலைத் திருமஞ்சனத்துக்காகச் சந்நிதி திறந்தனர் லோகசாரங்கர் குழுவினர். திருவரங்கனின் நெற்றியிலிருந்து இரத்தம் ஊற்றெடுக்கக் கண்டு உள்ளம் பதைபதைத்தனர். அரசன்உள்ளிட்ட அனைவரும் அதிர்ச்சியும் அதிசயமும் அடைந்தனர்.

எல்லா உலகங்களுக்கும் தாயான பெரிய பிராட்டியார் தன் குழந்தை பாணரை அருகில் அழைத்து அருள்புரிய வேண்டுமென்றுமுன்னரே பெருமானிடம் விண்ணப்பித்திருந்தார்.

''இறையருளுக்குச் சாதி ஒரு பொருட்டல்ல, உள்ளார்ந்த பக்தியே வேண்டும் என்ற சாத்திரச் சித்தாந்தத்தை நிலைநிறுத்த எண்ணினான் அரங்கன். அன்றிரவு லோகசாரங்கரின் கனவில் தோன்றினான். 'நமக்கு நல்லன்பனான பாணர் பெருமாளை இழிவாக நினையாமல் நீர் உமது தோள்களில் எழுந்தருளப்பண்ணி வாரும்' என அருளாணையிட்டான்.

பெருமானின் கட்டளையை ஏற்ற லோகசாரங்கர் தம் செயலுக்காக வருந்தினார். வைகலில் நீராடி, பன்னிரு திருமண் சாத்தி பாணர் இருந்த இடம் சென்றார். அவரது திருவடியில் தண்டனிட்டு வணங்கினார்.

ஐம்பது ஆண்டுகள் வாழ்ந்திருந்த திருப்பாணாழ்வார் பத்துப் பாசுரங்களே அருளிச் செய்தார். எனினும்

'காண்பனவும் உரைப்பனவும் மற்றொன்றிக்
கண்ணனையே கண்டுரைத்த கடிய காதற்
பாண்பெருமான் அருள்செய்த பாடல் பத்தும்
பழமறையின் பொருளென்று பரவுமின்கள்'

என்று சான்றோர் அவர் பாடலைப் போற்றினர்.

''கொண்டல் வண்ணனைக் கோவலனாய்
வெண்ணெய்
உண்டவாயனை என்னுள்ளம் கவர்ந்தானை
அண்டர்கோன் அணிஅரங்கன் என்னமுதினைக்
கண்டகண்கள் மற்றொன்றினை காணாவே''

இது அவர் பிரபந்தத்தின் நிறைவுப் பாடல்.



''எமது தோள்களில் ஏறும்'' என்றார். பாணர் அச்சமும் வியப்பும் எய்தினார். பெருமானின் ஆணையை எடுத்துரைத்து 'பெரிய பெருமாளைச் சுமந்து செல்லும் பெரிய திருவடியின் (கருடனின்) பேறு எனக்குக் கிடைத்துள்ளது' என்றார் லோகசாரங்கர்.

''சுவாமி! கீழ்ச்சாதிக்காரனான நான் அரங்கன் கோயிலை மிதிக்கலாகுமோ' என்றார் பாணர், 'உம்மைவிட உகப்பானவர் பெருமாளுக்கு இல்லை; அவர் கட்டளைப்படியே நான் வந்துள்ளேன்' என்றார். பிறகு லோகசாரங்கர் பாணரைத் தோள்களில் எழுந்தருளப் பண்ணி அரங்கன் திருமுன்பு கொண்டு சென்று நிறுத்திவிட்டார். அரங்கனின் அழகை அடிமுதல் முடிவரை கண்டு மெய்சிலிர்த்து ஆனந்த பரவசமடைந்து நின்றார் திருப்பாணாழ்வார். அப்போது 'அமலனாதிப்பிரான்... என்று தொடங்கும் திவ்யப்பிரபந்தத்தை அருளிச் செய்தார்.

'அண்டர்கோன் அணிஅரங்கன் என் அமுதினை
கண்டகண் மற்றொன்றினைக் காணாவே'

என்ற நிலையில் நின்றார் பாணர். பெரிய பெருமான் திருப்பாணாழ்வாரைத் தமது திருமேனியில் கலக்க அருள்பாலித்தான். அவ்வாறே பாணர் பெருமாளுடன் ஒன்றானார்.

## சரவணபவனே சகலமும்



முருக நாமமே
துணையாய்க் கொண்டால்
முடியாத தொன்று இல்லை
பெருகி வந்திடும்
நலங்கள் யாவும்
பரந்தது அவன்
அன்பு எல்லை.

—செவ்வேள்



# பிள்ளையார்

'கோயிற்கலைச்செல்வர்'
**தி. இராச மாணிக்கம்**

எந்தச் செயலையும் தொடங்குமுன் பிள்ளையாரை வணங்குவதுஇந்துக்களின் மரபு. இல்லையெனில், இடையூறுகள் ஏற்பட்டு செயல்கள் தடைப்படும் என்பது அவர்களது அசைக்க முடியாத நம்பிக்கை. இவ்வாறு தம்மை வழிபடுவோருக்கு இடையூறு நேராது தடுப்பதால், அவன் ' விக்னேசுவரன்' என அழைக்கப் பெறுகிறான். அதாவது விக்னங் களுக்கு ஈசுவரன்; இடையூறுகளுக்குத் தலை வன் என்பதாம்.

'பிடி அதன் உருஉமை கொள மிகுகரியது வடிகொடு தனதுஅடி வழிபடும் அவர் இடர் கடிகணபதி வர அருளினன்.''

என வெகு அழகாக, ஞானசம்பந்தர் அருளி யுள்ளார். அடியார்களின் இடர்களைக்களைய வேண்டியே அவன் தோன்றினான் என்பது இதன் பொருளாம்.

விநாயகன் என்றால் தனக்கு மேல் நாய கன் அற்றவன் என்பது பொருள். அதாவது மூலமும் நடுவும் ஈறும் அற்ற முழுமுதற் பொருள் என்பதாம்.

வெட்டவெளியில் ஓங்காரத்தினின்றும் உலகம் தோன்றியது என்பர் ஆன்றோர். யானையின் வடிவம் ஓங்காரத்தை நினைவூட்டு வதாக உள்ளதால், இவனது யானையின் வடிவம் இவன் ஓங்கார வடிவினன் என்பதைப் புலப்படுத்துகிறது. இவனது 4 கைகள் வான வர் இயல்பினையும், தும்பிக்கை, விலங்கு இயல்பினையும், உடல் மனித இயல்பினையும் குறிக்கிறது. மத்தள வயிறும் குறுகியகால் களும் பூத இயல்பினையும், ஒரு கொம்பு இன்றி இருப்பது பெண் இயல்பினையும், மற்றொரு புறம் உள்ள கொம்பு ஆண் இயல்பினையும் உணர்த்துகின்றன. முகம் அஃறிணையையும், ஏனைய உடல் உயர்திணையையும் குறிப்பிடு கின்றன. இவையாவும் இவன் உலகெங்கும் நீக்கமற நிறைந்தவன் என்பதைச் சுட்டி காட்டுகின்றன. இவனது மத்தள வயிறு உலகம் யாவையும் இவனிடம் அடங்கியுள்ளது என்பதைக் காட்டுகிறது. இவனது கைகளில் உள்ள பாசம் படைத்தலையும், அபய முத் திரைகாத்தலையும், அங்குசம் அழித்தலையும் போதகம் அருளலையும், தும்பிக்கை மறைத் தலையும் குறிப்பதால், இவன் ஐம்பெருந் தொழில்களை ஆற்றும் பரம்பொருள் என் பதைக் குறிப்பால் உணர்த்துகிறது. அவனது சுளகு போன்ற இரு செவிகள் உயிர்களை அவற்றிற்கு ஏற்படும் துன்பங்களின்றும் காக் கின்றன.

ஆதிசங்கராச்சாரியரால் வகுக்கப்பட்ட இந்து மதத்தின் ஆறு சமயங்களில் காணா பத்தியம் ஒன்று. அதைப் பின்பற்றுபவர்களின் கொள்கை கணபதிதான் ஆதியும் அந்தமும் அற்ற முழு முதற்பொருள் என்பதாம்.

காணாபத்தியத்தில் ஆறு பிரிவுகள் உள்ளன. அவற்றைச் சார்ந்த ஒவ்வொரு வரும் கணபதியின் ஒவ்வொரு வடிவை வணங் குவர். அவ்வாறு வணங்கப்படும் ஆறு வடிவங் களாவன:

1. மகாகணபதி
2. அரித்ரகணபதி
3. சுவர்ண கணபதி
4. சந்தான கணபதி
5, நவநீத கணபதி
6. உன்மத்தஉச்சிஷ்ட கணபதி

டாக்காவிற்கு அருகில் உள்ள ரம்பால் என்ற இடத்தில் 5 தலைகள் 10 கைகளுடன் சிங்கத்தின் மீது உட்கார்ந்துள்ள ஏரம்ப கணபதி வடிவம் உள்ளது. அதன் மேல் அமைக்கப்பட்டுள்ள பிரபாவளியில் 6 சிறிய அளவிலான கணபதி வடிவங்கள் உருவாக்கப் பட்டுள்ளன. இவை காணாபத்தியத்தின் ஆறு பிரிவுகளைக் குறிப்பதாகக் கொள்ளப்படுகின் றன.

சிவாலயங்களில் மட்டுமின்றி வைணவ ஆல யங்களிலும் கணபதி வணங்கப்படுவது தனிச் சிறப்பாகும். அங்கு சுணபதி விசுவக்சேனர் [நித்ய முக்தர்களுக்குத் தலைவர்] என அழைக் கப்படுகிறார். அவர் தும்பிக்கையாழ்வார்' என்றும் அழைக்கப்படுகிறார். தாங்கள் எடுத்த காரியங்களில் வெற்றி பெற சமணர்களும் பௌத்தர்களும் இவரை வழிபடுவர்.

இவரது சந்நிதி இல்லாத சிவாலயங்களே இல்லை. ஒவ்வொரு கோயிலிலும் இவருக்கென்று தனியாக ஒரு பெயரும் அதற்கென ஒரு தலவரலாறும் உண்டு. உதாரணமாக:—

| தலத்தின் பெயர் | பிள்ளையாரின் பெயர் |
|---|---|
| திருக்கோவிலூர் | பெரியானைக் கணபதி |
| மேலக்கடம்பூர் | ஆரவாரப் பிள்ளையார் |
| சிதம்பரம் | திருமுறைசுட்டிய பிள்ளையார் |
| திருக்கடவூர் | கள்ளவாரணப் பிள்ளை |
| திருக்குறுக்கை | குறுக்கை விநாயகர் [யார் |
| திருவீழிமிழலை | படிக்காசு விநாயகர் |
| திருவாரூர் | மாற்றுரைத்த விநாயகர் |
| திருமுருகன்பூண்டி | கூப்பிடு பிள்ளையார் |

நடைபாதைகளில் ஆங்காங்கு பிள்ளையாரது சிறுசிறு கோயில்கள் காணப்படுகின்றன. வரசித்திவிநாயகர், ஆதிசத்தி விநாயகர், சித்தி புத்தி விநாயகர், வழிவிடு விநாயகர் என்பன அவரது பெயர்களில் ஒரு சிலவாம். இவ்வாறு ஒவ்வொரு தலத்திலும் தலவரலாற்றுடனும் தனிப் பெயருடனும் இவர் விளங்குவதும் ஊரில் பல இடங்களில் பல பெயர்களில் இவர் எழுந்தருளியுள்ளதும், வேறு இறை வடிவங்களுக்கு இல்லாத தனிப் பெருஞ் சிறப்பாகும்.

இவரது வழிபாடு ஏனைய தெய்வ வழிபாடுகளைக்காட்டிலும் மிகமிக எளிமையானது. வெறும் அருகம் புல்லைக் கொண்டே இவரைத் தொழலாம். சாணம், மஞ்சள் ஆகியவற்றைக் கொண்டு இவரை அமைத்து வணங்கலாம்.

பண்டை நாட்களில் இவர் உட்கார்ந்த நிலை அல்லது நின்றநிலையில்தான் உருவாக்கப்பட்டார். இரு கைகள் மட்டுமே அமைக்கப்பட்டன. ஒரு கையில், பரசும், மற்றொரு கையில் முள்ளங்கியும் உருவாக்கப்பட்டன.

ஆகமங்களில் விதிக்கப்பட்ட இவரது வடிவங்களாவன ;—

1. பாலகணபதி என்பது 4 கைகள் கொண்ட குழந்தை வடிவம்.

2. எட்டு கைகளுடன் கூடிய இளைஞனது வடிவம் கொண்ட தருண கணபதி.

3. பக்தி கணபதியின் 4 கைகளில் ஒரு கையில் பாயசபாத்திரம் காணப்படும்.

4. ஹேரம்ப கணபதி 5 தலைகள் 10 கைகளுடன் சிங்கத்தின் மீது உட்கார்ந்து இருப்பார்.

5. தாமரை பீடத்தின் மேல் நின்றுள்ள நிலையில் தன் 4 கைகளில் ஒரு கையில் உள்ள போதகத்தை வாயில் போடுவது போன்று இருப்பது பிரசன்ன கணபதி.

6. 4 கைகளுடன் அச்சத்தை அளிக்கும் தோற்றம் உடையது துவிஜ கணபதி.

7. 4 கைகளில் ஒன்றில் போதகம் உள்ள பாத்திரத்தை வைத்திருப்பது உச்சிஷ்ட கணபதி.

8. பெருச்சாளி மீது அமர்ந்து மாம்பழம் சாப்பிடுவது போன்று இருப்பது விக்னராஜ கணபதி

9. புவனேசகணபதிக்கு எட்டுகைகள் இருக்க வேண்டும்.

10. 8 கைகளுடன் நடன நிலையில் உள்ளது நிருத்த கணபதி.

11. பாசம், அங்குசம், மோதகம், தந்தம் ஆகியவற்றை தன் 4 கையில் உடையது ஹரிதர கணபதி.

12. 16 கைகள் கொண்டது வீர விக்விக்னேசுவர்.

13. சக்தி கணபதியின் 5 வகைகள் உள்ளன. அவையாவன :—

(அ) 4 அல்லது 6 கைகளுடன் இலட்சுமியை அணைத்து இருப்பது இலட்சுமி கணபதி.

(ஆ) தன் மடிமீது உட்கார்ந்துள்ள தேவியின் மார்ம உறுப்பினை தொடுவது உச்சிஷ்ட கணபதி.

(இ) 10 கைகளுடன் தன் மடிமீது தேவியை வைத்திருப்பது மகாகணபதி.

(ஈ) 5 கைகளுடன் தன் மடிமீது உள்ள தேவியை அணைத்தபடி இருப்பது ஊர்த்துவ கணபதி.

(உ) 6 கைகளுடன் இலட்சுமியை தன் அருகில் வைத்துள்ளது பிங்கல கணபதி.

இவரது அரிய வடிவங்கள் ஆங்காங்கு உள்ள கோயில்களில் காணப்படுகின்றன. அவற்றில் ஒரு சில:

1. சுசீந்திரம் தாணுமாலயன் கோயிலில் பிள்ளையாரின் பெண்வடிவம் உள்ளது.

2. திருப்பரங்குன்றம் உமையாண்டார் கோயிலில் 12 கைகளுடன் சிங்க ஊர்தி மேல் கணபதி உட்கார்ந்த நிலையில் காணப்படுகிறார்.

3. மதுரை மீனாட்சி அம்மன் அருங்காட்சியகத்தில் உட்கார்ந்த நிலை மற்றும் நின்ற நிலையில் மகாகணபதி வடிவங்கள் உள்ளன.

4. பொள்ளாச்சி பத்ர காளியம்மன் கோயிலில் 5 தலைகள் 10 கைகளுடன் சிங்க ஊர்தியின்றி பிள்ளையார் வடிவம் காணப்படுகிறது.

5. கடல் நுரையால் செய்யப் பெற்ற வெள்ளை விநாயகர் திருவலஞ்சுழி கற்பக நாதேசுவரர் கோயிலில் உள்ளார்.

# வைணவப் பெரியோர்கள் பார்வையில் இராமகாதை

பேராசிரியர் டாக்டர் தெ. ஞானசுந்தரம்
பச்சையப்பன் கல்லூரி, சென்னை.

இந்திய இலக்கிய மண்ணில் ம்லர்ந்த காப்பிய மலர்கள் இராமகாதையும் பாரதமும் ஆகும். இம்மலர்கள் கவிதை வண்ணமும் அறமணமும் பெற்றுக் கால வெங்கதிரில் கருகாமல் புதுமைப் பொலிவுடன் திகழ்கின்றன.

அறத்தின் வெற்றியைப் பறையடித்தல் இந்திய இலக்கியங்களின்—குறிப்பாகத் தமிழ் இலக்கியங்களின்—உயிர் மூச்சாகும். மேலை நாட்டுக் காப்பியங்கள் அறத்தின் உயர்வினையே அன்றி மறத்தின் மாண்பினையும் கூடப் பேசும். அக்கிளிசின் சீற்றத்தைப் பாடக் கவிதைத் தெய்வத்தின் கடைக்கண் நோக்கம் வேண்டி நிற்கிறான் கிரேக்கக் கவிஞன் ஓமர்.

"Sing of the wrath of Achills with Agamemnon the King''.

' ஆனால் தமிழ்க் காப்பியத்தில் எதுவும் மறத்தின் சிறப்பினைப் பாடிற்றிலை; மாறாக அனைத்தும் அறத்தின் ஆக்கத்தினையே அழுத்தமாக உரைக்கின்றன. 'அரைசியல் பிழைத்தோர்க்கு அறம் கூற்றாகும்' என்பது சிலம்பின் குறிக்கோள்களுள் ஒன்று. அழிபசி தீர்க்கும் அறத்தினை மையமாகக் கொண்டது மணிமேகலை. கல்வியிற் பெரிய கம்பனும் இச் செந்நெறியினையே இராமகாதையில் எழிலுறப் புனைவதாக இயம்புகிறான். இராமன் வெற்றியில் வாய்மையின் வெற்றியும, இராவணன் வீழ்ச்சியில் பொய்மையின் தோல்வியும் புகழப் படுகின்றன. இராம தூதனிடம் தன் வரலாறு கூறும் இலங்கைமாதேவி இதனை, 'அறம் வெல்லும, பாவம் தோற்கும்' எனச் சுருங்கக் கூறி அவனை இறைஞ்சிச் செல்கின்றாள். 'சத்யமேவ ஜயதே ந அந்ருதம்' என்பது உபநிடதத்தொடர். இதனைக் கம்பன் தமிழில் அழகுற மொழி பெயர்த்துக் காப்பியத்தின் மையக் கருத்தாகக் காட்டுகிறான்.

இராமாயணம் பல்வேறு அறங்களைப் பகர்வதாகப் பலரும் கூறுவர். 'ஒருத்திக்கு ஒருவன்' என்ற நியதி மட்டும் நிலவிய நாட்டில் 'ஒருவனுக்கும் ஒருத்தியே' என்னும் பிறன்மனை நோக்காப் பேராண்மை யறத்தை உடன்பாட்டு முறையில் இராமன் வாழ்க்கையாலும், எதிர்மறை வகையில் இராவணன் வாழ்க்கையாலும் விளக்கிக் கற்பு நிலையினை இருபாலுக்கும் பொதுமையாக்குகிறது இராமகாதை.


கோசல இராமன், சிருங்கிபேரத்து ஏழை வேடன்குகனையும், கிட்கிந்தை வானரக்கோன் சுக்கிரீவனையும் அரக்கர் குலத்து வந்த இலங்கை அறிஞன் வீடணனையும் தம்பியராகத் தழுவுகின்றான். அவன் செயல், குலங்கடந்து, 'உலகனைத்தும் ஒரு குடும்பம்' என்னும் ஒருமைப்பாட்டின் விளக்கமாகத் திகழ்கின்றது.

சரணாகதி வத்சலன் இராமன். தன்னைப் புகலடைந்தோர்க்கெல்லாம் அடைக்கலம் தந்த புண்ணியன், அவனை அடைந்து நற்கதி பெற்றோர் இராமகாதையில் பலர். எனவே இராமகாதை சரணாகதியின் பெருமை பேசும் நூல்.

இப்படிப் பலப்பல விளக்கங்கள்.

இராமாயணத்தில் ஊறித் திளைத்தவர்கள் வைணவப் பெரியோர்கள். திவ்வியப் பிரபந்தப் பாசுரப் பலாச்சுளைகளை இராமாயணத் தேனிலும் பாரத நெய்யிலும் தோய்த்து உண்ணத் தரும் சுவைஞர்கள் அவர்கள். அவர்கள் பார்வையில் இராமன் கதை மேலும் சில அறங்களைப் பரக்கப் பேசுகின்றது.

இராமன் நற்பண்புகளின் வடிவம். அவன் இலட்சிய மனிதனாகக் காட்சியளிக்கிறான். தந்தை தாய் ஆசிரியர் முதலியோர் சொல்லின் மிக்க மந்திரமில்லை என்பது அவன் உட்கோள். தயரதன் இராமனுக்கு முடிசூட்ட. முடிவு செய்கின்றான். இராமனைச் சுமந்திரன் சென்று அழைத்து வருகின்றான். தயரதன்



இராமனை நோக்கி, 'புனையும் மாமுடி புனைந்து. இந்த நல்லறம் புரக்க நினையல் வேண்டும்; யான் நின்வயின் பெறுவது ஈது' என்றான். அப்பொழுது இராமன் நிலை என்ன? அரச பதவி தன்னை நாடி வருகிறதே என்ற மகிழ்ச்சி அவன்பால் இல்லை. தந்தை ஏவலை மறுத்தல் தகுதியன்று என்ற எண்ணமே தலை தூக்கி நிற்கின்றது. தந்தையின் ஆணையை நிறைவேற்றுவதே தன் கடன் எனக் கருது கின்றான்.

இராமனது இந்த மன நிலையை

''தாதை அப்பரிசு உரைசெய
 தாமரைக் கண்ணன்
காதல் உற்றிலன்; இகழ்ந்திலன்;
 கடன்இது' என்று உணர்ந்தும்
'யாது கொற்றவன் ஏவியது
 அதுசெயல் அன்றோ
நீதி எற்கு!' என நினைந்தும்,
 அப்பணி தலைநின்றான்'

எனப் பேசுகிறான் கம்பன்.

இந்த மனநிலை தன்னை நாடிப் பதவி வந்தபொழுது மட்டுமல்லாமல், தன்னை விட்டுப் பதவி சென்ற போதிலும் அவனிடம் நிறைந்து காணப்படுகின்றது. இராமன் கைகேயியை நாடிச் செல்கிறான். அவன் பரி விற்குரிய தாயாகிய அவளோ இப்பொழுது கூற்றமாக மாறிக் கொடுஞ் சொற்களை உதிர்க் கிறாள். அவனை ஏழிரண்டு ஆண்டுகள் காட் டில் தவம் இயற்றி வருமாறு பணிக்கிறாள், தீயவை யாவினும் சிறந்த தீயாள். அவள் சொற் கேட்டு இராமன் வெகுண்டானில்லை; மிகுந்த மகிழ்ச்சியே அடைகின்றான். 'அப்பாடா! நம்மைவிட்டு இந்தச் சுமை கழிந்ததே! என்ற மனநிறைவே கொள்கிறான். உடனே காடு செல்லத் துணிகிறான். கைகேயியை நோக்கி

'என் இனி உறுதி அப்பால்!
 இப்பணி தலைமேல் கொண்டேன்
மின்ஒளிர் கானம் இன்றே போகின்றேன்;
 விடையும் கொண்டேன்.''

என அன்றலர்ந்த செந்தாமரையினை வென்ற முகத்தோடு கூறிச் செல்கின்றான். இங்கும் தந்தை தாயர் பணியை நிறைவேற்றுவதே கடன் என்னும் கருத்தில் இராமன் நடந்து கொள்வதனைக் காணலாம்.

மேலும், அகத்தியர், சுக்கிரீவன், கடலரசன் ஆகியோர் சொன்னவண்ணம் செய்கின்றான் பெருமான். இப்படி 'ஒருவன் சொல்லியதை ஒருவன் செய்யக் கடவன்' என்ற அறத்தைத் தன் வாழ்வால் விளக்கிச் செல்கின்றான் தாசரதி. அவன்உணர்த்தும் அறம் பொது அறம்.

இராமன் தம்பியர்களான இலக்குவனும் பரதனும், சத்துருக்கனனும் தம் வாழ்வால் வேறுவகையான அறங்களை உணர்த்திச் செல் கின்றனர். அவர்கள் உணர்த்தும் அறம் சிறப்பு அறம். காலமும் கணக்கும் நீத்த காரணன் கைவில் ஏந்தி அயோத்தியில் இராமனாகத் தோன்றினான். இராமன் பரம்பொருள். அப் பரம்பொருளுக்குத் தொண்டு செய்யும் அறத் தினை மேற் கொண்டார்கள் தம்பிமார்கள்.

இராமனோடு இணைபிரியாது நீங்கா நிழலாக வாழ்கிறான இலக்குவன். அவன் இராமனாகிய நெய்குழலின் பின்னே செல்லும் இழையாகிறான். இராமன் நல்வாழ்வில் தன் மகிழ்ச்சியைக் காணகிறான். இராமனுக்குத் தொண்டு செய்வதற்காகத் தன் மனைவி ஊர்மிளையை அரண்மனையில் விட்டுவிட்டுத் தான் மட்டும் அடியவனாக இராமனைப் பின் தொடர்ந்து கானகம் செலகின்றான். இராமனுக்குப் பலதரப்பட்ட உதவிகளைச் செய்கின்றான். ஆற்றினைக் கடக்கப் படகோட்டுகிறான்; உண்பதற்குக் காயும், கிழங்கும் தந்து அவன் உண்ட மிச்சிலைத் தான் மிசைகிறான; இரவெல்லாம் அழகனும் அழகியும் உறங்க வில்லையூன்றிய கையோடும் வெய்துயிர்ப் போடும் கங்குல் எல்லை காண்பளவும் இமைப் பின்றிக் காவல் புரிகின்றான். இராமனேகண்டு மனம் நெகிழ்ந்து கண்ணீர் சோர இலைவீடு கட்டித் தருகின்றான். இவை மட்டுநதானா? போர்க்களத்தில் மும்முறை உயிர் கொடுத்துப் பணி செய்கின்றான். உடலால், பொருளால், உயிரால், பரம்பொருள் இராமனுக்குப் பணி செய்தவன் இலக்குவன். அவன் செய்த தொண்டு இறைத்தொண்டு.

பரதனும் இராமனுக்குத் தொண்டு செய்கிறான். அவன் இலக்குவனைப் போல இராமனைப் பின்தொடரவில்லை; பல்வேறு தொண்டுகள் செய்யவில்லை. தன் தாய் இழைத்த கொடுமையை அறிந்து துடிக்கிறான். இராமபிரானை நாட்டிற்கழைத்து வந்து முடி சூட்டக் கருதிக் கானகம் நோக்கிச் செல்கின்றான். இராமனோ பரதன் கருத்துக்கு இணங்கவில்லை. இராமன் பரதனைப் பார்த்து, 'என் ஆணையால் ஆனது ஓர் அமைதியின் அளித்தி, பார்' எனப் பணிக்கின்றான் பரதன். இராமன் மனக் கருத்தின் வழி நடப்பதே முறையெனக் கருதி அவன் பாதுகையைப் பெற்றுத் திரும்புகிறான். பதினான்காண்டுகள் நந்திக்கிராமத்தில் நாதன் பாதுகம் கோல்முறை செலுத்த அந்தியும் பகலும் நீர்அறாத கண்ணோடுஆற்றியிருக்கிறான். இலக்குவன் தொண்டிற்கும் பரதன் தொண்டிற்குமிடையே வேறுபாடு உண்டு. இராமனைப் பிரிந்தால் தனக்குண்டாகும் வருத்தத்தை நோக்கி இராமன் சொல்லையும் மீறி இராமனோடு சென்று தொண்டு புரிந்தவன் இலக்குவன். 'தன்னோடு காட்டிற்கு வர வேண்டா' என்ற இராமன் சொல்லையும் கேட்காமல் அவனைப் பின் தொடர்கிறான். ஆனால், பரதனோ தன் வருத்தத்தைப் பாராமல் இராமன் மனமகிழ்ச்சி ஒன்றினையே கருத்தில் கொண்டு நடக்கிறான், இவர்கள் அன்பினை வேறுவகையில் சொல்ல வேண்டுமானால், ஆள நினைத்த அன்பு இலக்குவன்அன்பு எனவும், ஆட்படுகின்ற அன்பு பரதன் அன்பு எனவும் கூறலாம். எனவே தன் விருப்பத்தையும் துயரத்தையும் ஒதுக்கிவிட்டுப் பரம்பொருள் இராமனுக்குப் பரதன் இயற்றிய தொண்டு இலக்குவன் தொண்டினும் உயர்ந்ததாகின்றது. பரதன் தொண்டு தன்னுரிமையற்ற இறைத்தொண்டு.

## பந்தம் நீங்காவிடில் உய்வு இல்லை

**தந்தை தாய்**

**தன்னுடன் தோன்றினார்**

**புத்திரர் தாரமென்னும்**

**பந்தம் நீங்காதவர்க்கு**

**உய்ந்து போக்கு இல்**

**—மூன்றாம் திருமுறை**

**திருஞானசம்பந்தர் தாம் அருளியுள்ள திருவாரூர்ப் பதிகத்தில் பந்தபாசம் நீங்காவிட்டால் உய்வு பெற முடியாது என அருளியிருப்பதை மேற்காணும் பாடல் வரிகள் தெளிவு செய்கின்றன.**

இராமன் தம்பியரில் பேசாத தம்பி சத்துருக்கனன். அவன் தொண்டு மேற்கூறிய இருவர் தொண்டினும் உயர்வு உடையதாகத் திகழ்கின்றது. அவன் இராமனைத் தன் தலைவனாகக் கொள்ளவில்லை. இராமதாசன் பரதனையே தன் தலைவனாகக் கொள்கிறான். இராமனை பிரியாத இலக்குவனைப் போலப் பரதனைப் பிரியாதவனாய் இருக்கிறான். இராமனின் சத்துருக்கனன் இப்படி அடியார்க்கு அடியனாகும் உயர்நிலையில் நிற்கிறான். சத்துருக்கனன் தொண்டு தன்னுரிமையற்ற இறையடியார் தொண்டு. தம்பியருள் சத்துருக்கனன் தொண்டினையே வைணவ உலகம் பெரிதும் கொண்டாடுகின்றது.

வைணவப் பெரியோர்கள் பார்வையில், இராமன் உணர்த்தும் அறம் பித்ருவசன பரிபாலந தொடக்கமான சாதாரண தர்மமாகவும் இலக்குவன் பரதன் சத்துருக்கனன் ஆகியோர் உணர்த்தும் அறம் முறையே பகவத் கைங்கர்யம், பகவத் பாரதந்தர்ய கைங்கர்யம், பாகவத பாரதந்தர்ய கைங்கர்யம் என்னும் அசாதாரண தர்மமாகவும் தோன்றுகின்றன.

# சாதுவாய் நிற்கும் ஓர் சரித்திரம்

**கவிஞர் சுவாதி, பி.காம்.,**

கோயிலின் அமைப்பே ஓர் வீரத்தை நமக்குள் உணர்த்துவதாய் இருக்கிறது. ஆனால் ஒரு ஆச்சரியம். எந்த திருத்தலமாவது தெற்கு நோக்கி இருக்குமா ஆனால் இருக்கிறதே; புதுகை மாநகரின் தலைமைக்கோயில் ஸ்ரீபிரக தம்பாள் ஆலயம்.

அதிகாலை ஐந்து மணி. நாசிக்குள்ளே சுகந்தம் வீசும் நேரம். மேளதாளங்களுடன் அம்பாளுக்கு பூஜை நடந்து கொண்டிருந்தது. முன்னே நுழையும் போதே பிள்ளையார் ஆசி வழங்கி வரவேற்கிறார். புதுக்கோட்டை சமஸ்தான மன்னர்களின் சித்திரங்களும் தலப் பெருமைகளும் வரையப்பட்டுள்ளன.

கோயிலை எத்தனை முறை சுற்றிப் பார்த்தாலும் ஏதோ ஒன்று இல்லையே என மனது சற்று சிந்தித்து பார்த்தபோது தெரிந்தது. இங்கு நவகிரகங்கள் இல்லை. ஆனால் அருகில் நவகிரக கோயில் ஒன்று உள்ளது. ஏன் என்று தெரியவில்லை. அதைப்பற்றி எந்தக் குறிப்புகளும் இல்லை. இக்கோயிலுக்குள் சூரியனுக்கும் சந்திரனுக்கும் தனித்தனியாக சந்நிதிகள் உள்ளன. இக்கோயிலின் மற்றொரு சிறப்பாக இங்குள்ள மகிழ மரத்தைக்கூறலாம். இந்த மரம் எத்தனையோ நூற்றாண்டு காலமாக இருக்கிறதாம். மலையின் மேல் சுனை, காமதேனு பசு தன் கொம்புகளால் கீறி கங்கை நீரை நிரப்பியதாம். எனவே இதனை ''கங்கா தீர்த்தம்'' என்கிறார்கள். இங்குள்ள லிங்கத்தின் தலையில் காமதேனுப் பசுவின் குளம்புக் குறிகள் இருக்கிறதாம். இக்காரணத்தால் தான் அந்த பகுதிக்கே கோகர்ணம் என்ற பெயர் ஏற்பட்டதாம்.

கல்யாண மண்டபமும், ஊஞ்சல் மண்டபமும் அங்குள்ள தூண்களில் பல அரிய சிற்பங்களும் குகையில் பாறையிலேயே குடைந்தமைக்கப்பட்டுள்ள நான்கு தூண்களையும் பார்க்கும்போது நமக்கு மெய்சிலிர்த்துப் போகிறது. எந்தக் கல்லூரியில் இதன் மேஸ்திரி இஞ்சினியரிங் படித்திருப்பார்? அக்காலத்தில் படிக்காமலேயே பல நுண்ணிய கலைகளைக் கற்று ஆற்றலோடு திகழ முடிந்தது. ஆனால் இப்போது படித்தும் 'தண்டச்சோறு' என்ற பட்டத்தை தவிர வேறு எதைத்தான் சாதிக்க முடிந்தது.

இக்குகைக்கோயில் மகேந்திரவர்ம பல்லவன் நியமித்தது என குறிப்புகள் கூறுகின்றன. தூண்களில் மன்மதன், ரதி, கைகேயி, தசரதன், இராவணன், குதிரை வீரன் முதலிய கற்சிலைகளும் உள்ளன. ஒரு பாறையில் சப்த கன்னிகைகள், பிள்ளையார், வீரபத்திரர் ஆகிய சிலைகளும் உள்ளன. 4 தூண்களும், விநாயகப் பெருமான் கங்காதரர் முதலிய சிலைகளும் பாறையில் குடையப்பட்டவை.

பிரகதம்பாள் அம்மனின் உற்சவ விக்கிரகம் ஐம்பொன்னால் அமைக்கப் பெற்றது. முன் மண்டபத்தின் மேல் விட்டத்தில் ராமாயணக் கதைகள் பல வர்ணங்களில் தீட்டப் பெற்றுள்ளன. உள்ளே செல்லச்செல்ல மலையின் தளத்திற்கு தகுந்தாற்போல் பிரகாரங்கள் அமைக்கப்பட்டுள்ளன. கோயிலுக்கு மேல் மாடியிலும் பல சந்நிதிகள் இருப்பதால் இது ஒரு மாடக்கோயில்.

இக்கோயிலில் குகைக் கோயில் மண்டபச் சுவர்களிலும், பாறைகளிலும், 11 கல்வெட்டுக்கள் தமிழில் உள்ளன. இவைகள் அரசாங்கத்தால் நகல் எடுக்கப்பட்டு 1902-ஆம் ஆண்டில் 410-411 எண்களாகவும், 1904-ல் 304 முதல் 312 எண்களாகவும் பதிவு செய்யப்பட்டு தென்னிந்தியர் கல்வெட்டு தொகுதிகளில் (S.I.I. VII-XIII) பிரசுரிக்கப்பட்டுள்ளன.

உள்ளே நுழைவதற்கு முன் எதிரில் தட்சிணாமூர்த்தியும் விநாயகரும் காட்சி தருவர். ராஜகோபுரத்துக்குள் நுழைந்தால் கல்யாண மண்டபம், ஊஞ்சல் மண்டபம், உள் பகுதியில் பிரகதாம்பாள் அம்மன் அதன் சுற்றில் அறுபத்து மூவர் காட்சி கொடுத்த நாயனார் (ரிஷப வாகனச் சிலை) காசிநாதர் முதலிய மூர்த்திகளின் சிலை, அப்படியே நேராகச் சென்றால் மகேந்திரவர்மப் பல்லவன் அமைத்த குகைக் கோயிலைக் காணலாம். இதுவே மூலஸ்தானம். குகையில் மூர்த்திகளும் 4 தூண்களும் பாறையிலேயே குடைந்தமைக்கப்பட்டுள்ளன. தெற்கில் விநாயகரும் வடக்கில் கங்காதரரும் நடுவில் கோகர்ணேஸ்வரரும் காட்சி தருகின்றார்கள். மலையின் வெளிப்பக்கத்தில் சுனைத்தீர்த்தம் உள்ளது. அப்படியே வலமாக வந்தால் மங்கள நாயகி சந்நிதி தெற்கு நோக்கியும், பசுவின் குளம்பு பட்ட லிங்க வடிவான பகுளவனேஸ்வரர் சந்நிதி கிழக்கு நோக்கியும் உள்ளன. இச்

சந்நிதிகளுக்குக் கிழக்கில சுக்ரவார மண்டபமும், பக்கத்தில் சதாசிவ பிரம்மேந்திரர் சிலையும் தலத்துக்குரிய வகுளமரமும் (மகிழமரம்) உள்ளன. கோயிலுக்கு மேல் மாடியில் மேற்புறத்தில் ருத்திராட்சலிங்கம். அம்மன், துர்க்கை, லட்சுமி, சரஸ்வதி, முருகன் முதலியோரின் சந்நிதிகளும் கீழ்புறத்தில் சுரஹரேஸ்வரர், பிரமன், பைரவர் முதலியோர்களின் சந்நிதிகளும் உள்ளன. ஆங்காங்கு மண்டபத் தூண்களின் பல புராண சிற்பங்களும் குதிரை வீரரின் சிலைகளும் காண்போர் மகிழும்படி உள்ளன.

எல்லாவற்றையும் பார்க்கும் போது திருநாவுக்கரசர் பாடிய

''பேதை மடமங்கையொரு பங்கிட
மிகுத்திடபமேறியமரர்
வாதைபட வண்கடலெழுந்த விடமுண்ட
சிவன் வாழுமிடமாம்
மாதரொடு மாடவர்கள் வந்தடி
யிறைஞ்சி நிறை மாமலர்கள் தூய்
கோதைவரி வண்டிசைகொள் கீதமுரல்கின்ற
வளர் கோகர்ணமே''

பாடல் எத்தனை உண்மை எனப் புரிந்தது.

ஆலயங்கள் அன்பை-நேயத்தை நமக்குச் சொல்லி தருவது மட்டுமல்ல. நமது மூதாதையர்களின் சரித்திரத்தை, பண்பாட்டை விளக்குவது, எனவே புராதனச் சின்னங்களை மதிப்போம். அவற்றின் மேல் மாசுபடாமல் காப்போம். நமது உடைமையை காப்பது நமது கடமை.


— — —



**என் குழந்தை சேற்றையும் புழுதியையும் பூசிக்கொண்டிருந்தால், அதைக் கழுவி என் மடிமீது அமர்த்திக்கொள்வது என் கடமையல்லவா?**

**குழந்தாய்! கவலையுறாதே! இவ்வுலகப் பந்தங்களெல்லாம் நிலையில்லாதனவே. இன்று அவையே சாரமும் பயனும் எனத் தோன்றும். ஆனால் நாளை அவை மறைந்துவிடும். இறைவனுடன் உள்ள தொடர்பே உண்மையானது.**

—ஸ்ரீ சாரதா தேவியார்



# ஒன்றாம் பிறையா? மூன்றாம் பிறையா?

சேது. சிவா

சிவபெருமானின் சடையிற் சூடியது சந்திரனின் ஒன்றாம் பிறை என்றும், மூன்றாம் பிறை என்றும் இருவேறுகருத்துகள்கூறப்படுகின்றன. அதனைப் பற்றி அறிந்து கொள்வதே இக் கட்டுரையின் நோக்கமாகும்.

பிறையைப் பற்றிப் பேசுமுன், பிறைகளையுடைய சந்திரனைப் பற்றித் தெரிந்துகொள்ள வேண்டும். சந்திரனானவன் சோமன், மதி, திங்கள், நிலா, ஆத்திரேயன் என்று பலபடக் கூறப்படுகின்றான்.

சந்திரன் திருமாலின் இருதயத்தில் தோன்றியவன் என்று பாரதமும்; 'எங்கள் மாதவன் இதயமா மலரில் வரும் உதயத் திங்கள்' என்று வில்லிபுத்தூரார் பாரதமும் கூறுகின்றன. அக்கினி தேவனிடமிருந்து சந்திரன் தோன்றினான் என்றும் கூறப்படுகின்றது. பிரம்ம புத்திரராகிய அத்திரிமுனிவரின் கடுந் தவம் காரணமாகஅவரின்வீரியம் மேலெழுந்து அவரின் வலக்கண் வழியாக ஒழுக, அதனைப் பிரம்ம தேவன் திரட்டித் தன் விமானத்தில் வைக்க; அது குழந்தையாய் உயிர் பெற்று ஆத்திரேயன் என்று பெயர் பெற்றதாக காசி காண்டத்தில் கூறப்படுகின்றது.

சைவ சமய குரவர்களில் முதல்வராகக் கருதப்படும் திருஞான சம்பந்தர் சுவாமிகள், உமையவளால் ஞானம் குழைத்துப் பால் ஊட்டப் பெற்றவர். அவர் கூறுவதனைத் தான் சைவர்கள் உண்மையாகக் கொள்ள வேண்டும். திருப்பாம்புரம் பதிகத்தில் ஆறாவவது பாடலில் அவர் பாடுகின்றார்;

'ஓதிநன் குணர்வார்க் குணர்வுடை ஒருவர்
ஒளிதிகழ் உருவஞ்சேர் தருவர்
மாதினை இடமா வைத்தளம் வள்ளல்
மான்மறி ஏந்திய மைந்தர்
ஆதிநீ அருள்என்(று) அமரர்கள் பணிய
அலைகடல் கடையஅன்(று) எழுந்த
பாதிவெண் பிறைசடை வைத்தளம் பரமர்
பாம்புர நன்னக ராரே''.

அமிர்தம் பெறுவதற்காகத் தேவர்களும்; அசுரர்களும் பாற்கடலைக் கடையும் பொழுது முதலில் தோன்றிய ஆலகால விடத்தை சிவபெருமான் ஏற்றுத் தன் கண்டத்தில் நிறுத்திக் கொண்டபின்; மறுபடியும் கடையும்பொழுது. பல பொருட்கள் தோன்றின. சந்திரனும் தோன்றினான் என்று அவர் கூறுவதனால் அதனையே உண்மையான வரலாறாகக் கொள்ள வேண்டும்;

சந்திரனின் வரலாறு பலபடக் கூறப்பட்டாலும்; அவனுக்குப் பதினாறு கலைகள் உண்டு என்பதில் கருத்து வேறுபாடு இல்லை.

தக்கன் தன்னுடைய அசுவனி முதல் ரேவதி முடிய பெயருடைய இருபத்தேழு பெண் மக்களையும் சந்திரனுக்குத் திருமணம் செய்து கொடுத்து; எல்லோரிடமும் ஒரே அளவான அன்புடன் இருக்க வேண்டும் என்றும், யாரிடமும் அதிகமான அன்பு செலுத்தக் கூடாது என்றும் கூறினான். அதனை ஏற்றுக் கொண்ட சந்திரன் சிலகாலம் கழித்து, கார்த்திகை உரோகிணிஆகிய இருவரிடம்மட்டும் அன்புமிக கொண்டு, மற்றவர்களிடம் அன்பு குறைந்தவனாக இருந்தான். அவனால் அன்பு செலுத்தப் படாத மற்ற இருபத்தைந்து பெண்களும் தம் தந்தையாகிய தக்கனிடம் சென்று; சந்திரனின பாகுபாட்டினைக் கூறி முறையிட்டார்கள். தனக்குக் கொடுத்த வாக்குப்படி நடக்காமல் மாறுபட நடந்ததினால் 'சந்திரன் நாள் ஒன்றுக்கு ஒரு கலையாகத் தேய்ந்து மாயக் கடவது' என்று தக்கன் வசைமொழி கூறிவிட்டான். பதினாறு கலைகளுடன் முழுச் சந்திர

னாக பூர்ணநிலாவாகஇருந்த தான், நாள்ஒன்றுக்கு ஒரு கலையாகத் தேய்ந்து வருவதனைக் சந்திரன் இந்திரனிடம்சென்று முறையிட்டான். இந்திரன் தன்னால் எதுவும் செய்ய இயலாது என்று கூறி, பிரம்மாவிடம் சென்று கூறினால் பிரம்மா தன் மகனாகிய தக்கனை அழைத்து, வசை மொழியை மாற்றும்படி கூறலாம் என்று கூறினான். சந்திரன் பிரம்மாவிடம் சென்றான். தக்கன் தன் மகனேயாயினும் தன் சொல் கேட்க மாட்டான்; தன் முனைப்பு — அகம் பாவம்—உள்ளவன் என்று கூறி, சந்திரனைச் சிவபெருமானிடம் செல்லுமாறு பிரம்மா அனுப்பினான்.

சிவபெருமானிடம் அடைக்கலம் என்று சந்திரன் அடைந்தான். அவன் அடைக்கலம் என்று சென்ற பொழுது அவனின் பதினாறு கலைகளில் பதினைந்து தேய்ந்து, ஒருகலை மட்டும் எஞ்சி இருந்தது. இறைவனிடம் தன் அழிவைப் பற்றிக் கூறி, 'காத்து அருள வேண்டும்' என்று இறைஞ்சினான். பெருமான் சந்திரனை 'அஞ்சற்க' என்று ஆறுதல்கூறிதக்கனின் வசைமொழிப்படி நாள் ஒன்றுக்கு ஒருகலையாகத் தேய்ந்து விடுவாய்,எம் அருளால் மீண்டும் நாள் ஒன்றுக்கு ஒரு கலையாக வளர்வாய்' என்று அருள் புரிந்து தேயாமல் எஞ்சியிருந்த பதினாறாவது கலையாகிய ஒரு பிறையைத் தன் சடையிற் சூட்டிக் கொண்டார். இது சந்திரனின் வரலாறு.

சந்திரனின் பதினாறாவது கலையாகிய ஒரு பிறை சிவபெருமான் சடையில் உள்ளது. பதினைந்து கலைகள் தேய்ந்து மறைந்த நாளே அமாவாசையாகும். அந்தக் கணக்குப் படியே பிரதமை முதல் சதுர்த்தசி முடிய பதினான்கு நாட்களாகவும், தேய்பிறை பதினைந்தாவது நாளைஅமாவாசை என்றும்,வளர்பிறை பதினைந்தாவது நாளை பௌர்ணமி என்றும் முன்னோர்கள் வரையறுத்து உள்ளார்கள். சிவ பெருமான் சடையில் உள்ள ஒருகலைப் பிறை தேய்வதும் இல்லை; வளர்வதும் இல்லை. பதினைந்து கலைகளையுடைய சந்திரனே தேய்வதும், வளர்வதுமாகத் தேய்பிறை, வளர்பிறை என்று கூறப்படுகின்றான்.

அறிவாற் சிவமாகிய மாணிக்கவாசகர் சுவாமிகள் திருக்கோவையார் நாணநாட்டம் கிளக்கொத்தில் பிறைதொழுதல்என்ற துறையில் இந்த நிலையைப் பாடுகின்றார்.

''மைவார் கருங்கண்ணி செங்கரம்
கூப்பு மறந்து மற்றப்
பொய்வா னவரிற் புகாதுதன்
பொய்கழற் கேயடி யேன்
உய்வான் புகவொளிர் தில்லைநின்
றோன்சடை மேல(து) ஒத்துச்
செவ்வா னடைந்த பசுங்கதிர்
வெள்ளைச் சிறுபிறைக்கே'

திருஞான சம்பந்தர் சுவாமிகள் ஞானப் பால் உண்டபின் பாடிய முதலாவது பாடலில்;



## ஒழுக்கமே சொர்க்கம்
## ஒழுக்கமின்மையே நரகம்

—மகான் பசவர்.

'தோடுடைய செவியன் விடையேறியோர் தூவெண் மதிசூடி' என்று பாடுகின்றார். இப் பாடலில் ஓர் என்பதனை மதிக்கு முன் சேர்த்துப் பொருள் கொண்டால், 'தூய்மையும் வெண்மையுமான ஒரு சந்திரனைச் சூடி' என்று பொருள் படும்; சூரியன் பன்னிருவர் உள்ளனர் என்பதனைப் போன்று, பல சந்திரன் இருப்பதாகக் கூறப்படவில்லை. இருப்பது ஒரே சந்திரன். ஆகவே ஓர் என்பதனைப் பாடலில் உள்ளபடியே கொண்டால், 'ஒரு கலையாகிய தூய்மையான, வெண்மையான சந்திரன்' என்று கொள்ள வேண்டும்.

சிவபெருமான் சடையிற் பிறை சூடியதனை, திங்கள், மதி, பிறை, நிலா என்று பல்வேறு விதமாகப் பாடியிருந்தாலும், ஒரு சில பாடல்களில் 'ஒரு கலையாகிய பிறையைச் சூடி உள்ளார்' என்று தெளிவாகப் பாடுகின்றார். உதாரணத்திற்கு அவர் பாடல்களில் ஒரு சில அடிகள்;

''நீர்பரந்த நிமிர் புன்சடை மேலோர் நிலா
வெண் மதி சூடி''
—திருப்பிரமபுரம்—3

'அலரு மெறிசெஞ் சடைதன்மேல்
மலரும் பிறையொன் றுடையான்'..
—திருப்பனையூர்....3

'நீந்த லாகா வெள்ள மூழ்கு நீள்சடை தன் மேலோர்
ஏய்ந்த கோணற் பிறையோடரவு கொன்றை யெழிலார'
—திருக்கானூர்—2

மடைச்சுர மறிவன வாளையுங் கயறு
மருவிய வயல்தனில் வருபுனற் காழிப்
சடைச் சுரர் துறைவுதோர் பிறையுடை யண்ணல்''
—திரு விடைச்சுரம்-11

''நீடன் மேவு நிமிர்புன்சடை மேலொர்நிலா முளை சூடன்''
—திருவனேகதங்காவதம்-1

தேவாரம் அடங்கன் முறை முழுவதையும் பார்த்தோமானால், இதே போன்று பல பாடல்களைப் பார்க்கலாம்.

மாணிக்கவாசகர் சுவாமிகள், திருவாசகம் நீத்தல் விண்ணப்பம் நாலாவது பாடலில்,:

'வெண்மதிக் கொழுந்தொன்று ஒளிர்கின்ற நீள்முடி உத்தரகோச மங்கைக் கரசே' என்றும் நாற்பதாவது பாடலில் 'வெண்மதியினொற்றைக் கலைத்தலையாய் கருணாகரனே' என்றும் பாடுவதுடன்; திருக்கோவையார் 25-ஆவது பாடலில் 'கலைச் சிறு திங்கள் மிலைந்த சிற்றம் பலவன்' என்றும்; 56-ஆவது பாடலில் 'தாரென்ன வோங்குஞ் சடைமுடி மேற்றனித் திங்கள் வைத்த' என்றும் ஒரு கலைப்பிறையைச் சூடி உள்ளதனைத் தெளிவுபடப் பாடுகின்றார்.

மூத்த நாயனாராகிய காரைக்கால்அம்மையாரும் அற்புதத் திருவந்தாதியில்;

'பெருகொளிய செஞ்சடை மேற்பிள்ளைப் பிறையின்
ஒருகதிரே போற்(று) ஒழிகிற் றொக்கும்'
என்றுஒருகலைப்பிறையைக் குறிப்பிடுகின்றார்.

பதினோராந் திருமுறையில், சிவபெருமான் திருவிரட்டைமணி மாலையில் கபிலர் பாடுகின்றார்-

'இறைக்கோகுறைவில்லை உண்டிறையேஎழி லாரெருக்கு
நறைக்கோ மளக்கொன்றை துன்னுச் சடைமுடி நக்கர் சென்னிப்
பிறைக்கோர் பிளவும் பெறுவிளிக் கொண்டெம் பிரான் உடுக்கும்
குறைக்கோ வணம் ஒழிந்தாற்பிள்ளை ஏதுங் குறைவில்லையே' என்று பாடி ஒருகலைப்பிறை என்பதனை உறுதிப்படுத்துகின்றார்.

சிவபெருமான் சடையிற் சூடியது ஒரு கலைப்பிறை என்று தெளிவாகக் கூறப்பட்டிருந்தும்; 'மூன்றாம் பிறையே' என்கின்ற கருத்து எப்படி ஏற்பட்டது?

திருநாவுக்கரசு சுவாமிகள் திருக்குடந்தை கீழ்க் கோட்டம் திருப்பதிகத்தில்;



### எது உன் செல்வம் ?

**வறியவருக்கு உதவும் செல்வமே நீ உண்மையில் சேர்த்த பெருஞ்செல்வம். பெட்டியில் வைத்துப் பூட்டும் செல்வம் கோடியென்றாலும் அதனால் ஒரு பலனும் இல்லை.**

**—டாக்டர் திருமுருக கிருபானந்த வாரியார்.**

'முடிகொண்ட வள்ர்மதியும் மூன்றாய்த் தோன்றும்
முளைஞாயி றன்னமலர்க் கண்கள் மூன்றும்
அடிகொண்ட சிலம்பொலியும் அருளார் சோதி
அணிமுறுவற் செவ்வாயும் அழகாய்த் தோன்ற
துடி கொண்ட இடைமடவாள் பாகங்கொண்டு
சுடர்ச்சோதிக் கடிச்செம் பொன்மலை போலிந்நாள்
குடிகொண்டென் மனத்தகத்தே புகுந்தார் போலும்
குடந்தைக்கீழ்க் கோட்டத்தெங் கூத்தனாரே''
என்று பாடுகின்றார்.

இப்பாடலை மேல் நோக்காகப் படிக்கும் பொழுது சடையில் சூடியது மூன்றாம் பிறை என்று எண்ணத் தோன்றும். இப்பாடலை, கொண்டு கூட்டுப் பொருள் கொள்ளும்-அன்வயம்-முறையாவது முடிகொண்ட வளர்மதியும் மலர்க் கண்கள் மூன்றும் முளை ஞாயிறன்ன மூன்றாய்த் தோன்றும் என்று கொள்ள வேண்டும்.

அரவம் தீண்டி இறந்த அப்பூதியடிகளின் மகனை உயிர்ப்பிக்கும் பொழுது அவர் பாடும் பாடலில்;

'ஒன்றுகொ லாமுயரும் மதி சூடுவர்' என்றும்; தனித்திருக் குறுந்தொகையில் 'ஒன்று வெண்பிறைக் கன்னி' என்றும் பாடுகின்றார். அவர் முன்னுக்குப் பின் முரணாக நிச்சயம் பாட மாட்டார்.

மேற்காட்டிய பாடலில் கூறுவது மூன்றாம் பிறை தான் என்று விவாதத்திற்காகக் கொண்டால், அதே விடந்தீர்த்த திருப்பதிகத்தில் மூன்று என்று பாடும் பொழுது;

''மூன்றுகொ லாமவர் கண்ணுதலாவன
மூன்றுகொ லாமவர் சூலத்தின் மொய்யிலை
மூன்றுகொ லாங்கணை கையது வில்நாண்
மூன்றுகொ லாம்புரம் எய்தன தாமே' என்றும் தனிக்குறுந்தொகையில் மூன்று என்று பாடும் பொழுது;

'மூன்று மூர்த்தியுள் நின்றிய லுந்தொழில்
மூன்று மாயின மூவிலைச் சூலத்தன்
மூன்று கண்ணினன் தீத்தொழில் மூன்றினன்
மூன்று போதுமென் சிந்தையுள் மூழ்குமே' என்றும்; மூன்றினை வெவ்வேறாகப் பாடுகின்றார்.

வளர்மதிமூன்று-மூன்றாம்பிறை- என்று கொண்டவர், மூன்று என்று பாடும் மற்ற சந்தர்ப்பங்களில் வளர்மதியைத்தான் பாட வேண்டும்-அவ்வாறு பாடாமல் வெவ்வேறு மூன்றுகளைப் பாடுவதனால், மேற்காட்டிய பாடலில் 'மூன்றாய்த் தோன்றும்' என்பது கண்களே என்றும்; பிறை அல்ல என்பதும் தெளிவாகின்றது.

ஆகவே சிவபெருமான் சடையிற் சூடியது ஒருகலைப் பிறையே என்பதும், மூன்று கலைப் பிறை அல்ல என்பதும் உறுதிப்படுகின்றது.

— — —

## திருக்குறிப்புத் தொண்டர நாயனார்



**63** நாயன்மார்களில் ஒருவர் திருக்குறிப்புத் தொண்ட நாயனார். அவரைச் சேக்கிழார் பெருமான் போற்றி உரைக்கும்போது,.:......

**"இவ்வுலகிற் பிறப்பினால் ஏகாலிக் குலத்துள்ளார்
செவ்விய அன்புடை மனத்தார், சீலத்தின் நெறி நின்றார்
மைவிரவு கண்டரடி வழித்தொண்டர் உளரானார்"**

என்று போற்றுகின்றார். தேர் ஒலிக்கும், குதிரைகள் ஒலிக்கும் சிவபெருமானார் பேர் ஒலிக்கும் பெருங்காஞ்சியில் வாழ்ந்திருந்த திருக்குறிப்புத் தொண்டர். சிவனடியார்களின் ஆடை ஒலித்துத் தரும் திருத் தொண்டினை விருப்போடு ஏற்றுப் பணிபுரிந்தார் என்று போற்றுகிறார் சேக்கிழார்.

# நாளும் இன்னிசையால் தமிழ் பரப்பும்

# ஞானசம்பந்தன்

ச. முத்துசாமி, எம்.ஏ., பி.எட்., புத்தூர்.

**முன்னுரை :**

''நாளும் இன்னிசையால் தமிழ்பரப்பும்
ஞானசம்பந்தனுக்கு உலகவர்முன்
தாளம் ஈந்து அவன் பாடலுக்கிரங்குந்
தன்மையாளனை என் மனக்கருத்தை
ஆளும் பூதங்கள் பாடநின்றாடும்
அங்கணன்றனை எண்கணமிறைஞ்சுங்
கோளிலிப்பெருங்கோயிலுளானைக்
கோலக்காவினில்கண்டுகொண்டேனே''

—சுந்தரர்

சைவ சமயத்தை இவ்வுலகில் நிலை பெறச் செய்தவர்கள் நாயன்மார்கள் ஆவர். சமயக் குரவர்கள் எனப் போற்றப்படும் சம்பந்தர், அப்பர், சுந்தரர், மாணிக்கவாசகர் ஆகியநால் வரும் தேவாரப் பாக்களைத் தலங்கள்தோறும் சென்று பாடிப்பக்திநெறியை வளர்த்தனர். இசையால் பக்தி பெருகியது. உண்மையான பக்தி சமுதாயத்தில் அன்பையும் அறத்தையும் வளர்க்கும். ஆளுடைபிள்ளை என அழைக்கப் படும் ஞானசம்பந்தப் பெருமான் நாளும் இன்னிசையால் தமிழ் பரப்பியவர். அவர் வழங்கும் பக்திநெறியை விளக்குவதே இக் கட்டுரையாகும்.

**அவதாரம் :**

சம்பந்தர் சீர்காழியில் சிவபாத இருதய ருக்கும், பகவதி அம்மையாருக்கும் அவதரித்த வர். இவருடைய காலம் கி.பி. 635-650. பதினாறு ஆண்டுகள் இவ்வுலகில் வாழ்ந்தவர். காழிமன்னன், புகலியர்கோன், பாலறாவாயர், முத்தமிழ்வித்தகர், தோணிபுரத்தோன்றல் என இவருக்குப்பல பெயர்கள் உண்டு.

**பதிகங்கள் :** தேவாரப் பதிகங்கள் 1 முதல் 3 திருமுறைகளைப்பாடியவர்சம்பந்தர். முதல் திருமுறையில் 136 பதிகங்களும், 1587 பாடல்களும், இரண்டாம் திருமுறையில். 132 பதிகங்களும் 1341 பாடல்களும், மூன்றாம்திரு முறையில் 126 பதிகங்களும் 1353 பாடல்களும் உள்ளன.

**"பக்திமார்க்கம்"** சரியை, கிரியை, யோகம், ஞானம் இவை நான்கும் இறைவனை அடை வதற்குரிய வழிகளாகும். இவற்றைத் தாச மார்க்கம், சற்புத்திரமார்க்கம், சகமார்க்கம், சன்மார்க்கம் என்றும் அழைப்பர். கிரியை நெறியான சற்புத்திரமார்க்கத்தில் வழிபட்ட வர் சம்பந்தர். இறைவனைத் தந்தையாகவும் தன்னை மகனாகவும் பாவித்துப் பணிதல் இந்நெறியாகும். நறுமலர் தூபம், தீபம், திரு மஞ்சனம், திருவமுது முதலியன கொண்டு பஞ்ச சுத்தி செய்து ஆசனத்தில் அருவுருவத் திருமேனியை ஆவாகித்துத் தூய சிவநேயத் தால் பரவும் கிரியை நெறியே சற்புத்திர மார்க்கமாகும்.

சம்பந்தர் தமது வாழ்வில் பல அற்புதங் களை நிகழ்த்திக் காட்டினார். சம்பந்தரின் வாழ்வில் தாய்மொழிப் பணி, சமத்துவம், சமு தாயத் தொண்டு என்ற மூன்று கொள்கைகளும் நிறைந்திருந்தன. எளிய இனிய இசையில் மக்களுக்குக் கருத்தினைச் சொல்லிச் சமு தாயத் தொண்டு ஆற்றினார். அதிவேறுபாடு தீண்டாமை முதலிய மூடநம்பிக்கைகளுக்குச் சம்பந்தர் வாழ்விலும் இடம் இல்லை, பாடல் களிலும் இடம் இல்லை. உயர் குலத்தில் பிறந்ததனால் ஆன்மாக்கள் முத்தியை எய்த லாம் என்றும், தாழ்ந்த குலத்தில் பிறந்தவர் களுக்கு முக்தியில்லை என்றும் உரைப்பது தவறாகும் என்பதை


'குலவராகக் குலமிலருமாகக்குணம் புகழுங்கால்
உலகில் நல்லகதி பெறுவரேனுமலருறுதேன்
புலவமெல்லாம் வெறிகமழுந்தண் புகலூர்
தனுள்
நிலவமல்குசடையடிகள் பாதம்நினை
என்று பாடுகிறார். வார்களே''

**மண்ணில் நல்ல வண்ணம் வாழ்தல் :**

சைவர்களுடைய இல்லத்திருமணங்களில் சம்பந்தர் அருளிய இத்திருப்பாடல் ஓதப்படு கின்றது.

'மண்ணில் நல்லவண்ணம் வாழலாம் வைகலும்
எண்ணில் நல்லகதிக்கு யாதுமோர் குறைவிலை
கண்ணில் நல்லஃதுறும் கழுமலவளநகர்ப்
பெண்ணின் நல்லாளொடும் பெருந்தகை
இருந்ததே'

இறைவன் பெண்ணொரு பாகமாய் வீற்றிருக் கும் கோலத்தைச் சுட்டிக்காட்டி அவனை



வணங்கினால் இந்த உலகில் நல்லபடியாக வாழ முடியும் என்ற நம்பிக்கையை ஊட்டி நல்லகதி அடைவதற்கு எவ்விதமான குறையும் இல்லை என்பதை வலியுறுத்தும் பாடல் இது.

## கோளறுபதிகம் :

சம்பந்தருடைய வாழ்விலும், பாடல்களிலும் அஞ்சாமையும் தெளிவும் ஆர்வமும் நம்பிக்கையும்நிரம்பியிருக்கின்றன. மதுரையில் சமணரோடு வாதிட புறப்பட்ட சம்பந்தரை திருநாவுக்கரசர் சோதிடப்படி நல்லநாள்அன்று எனக் கூறித்தடுக்க முயன்றார். அப்பொழுது சம்பந்தப் பெருமான், எங்கள் இறைவன் சிவன் பெண் ஒருபாகமாகக் கொண்டவன், நஞ்சை உண்டு கண்டம் கறுத்தவன். கங்கையும், பிறையும் சூடிய அவன் என் உள்ளம் புகுந்தவன். அவன் என் உள்ளத்தில் குடி கொண்டிருப்பதால், சூரியன், சந்திரன், செவ்வாய், புதன், வியாழன், வெள்ளி, சனி ஆகிய நாள்களும் இராகு, கேது, என்பவையும் தீமை செய்யமாட்டா. அவை எல்லாம் அடியார்களுக்கு நன்மையே செய்யும் என அஞ்சாமையுடன்அவர்பாடியகோளறு பதிகம் இதுவாகும்.

''வேயுறு தோளிபங்கன்விட முண்டகண்டன்
மிக நல்லவீணை தடவி
மாசறுதிங்கள் கங்கை முடிமேல்அணிந்தென்
உளமேபுகுந்தஅதனால்
ஞாயிறு திங்கள் செவ்வாய் புதன், வியாழன்
வெள்ளி
சனிபாம்பும் இரண்டும் உடனே
ஆசறுநல்ல நல்ல அவைநல்ல நல்ல
அடியார் அவர்க்கு மிகவே''

இறைவனிடம் தமக்கிருந்த பக்திகாரணமாக ஆணையிட்டுப் பல பாடல்களை பாடியுள்ளார் திரு நனிப்பள்ளி தலத்தில் இறைவனை வணங்கிப் போற்றுபவர்களுடைய இடர்கள் நீங்கும் என ஆணையிட்டுக் கூறிப் பாடிய பாடல்:

''கடல்வரையோ தமல்குகழிகானல் பானல்
கமழ் காழியென்றுகருதப்
படுபொருளாறு நாலுமுளதாகவைத்த
பதியான ஞானமுனிவன்
இடுபறை யொன்று அவத்தர் பயன்மேலிருந்தி
ணிசையாலுரைத்த பனுவல்
நடுவிருளாடு மெந்தை நனிபள்ளியுள்க
வினை கெடுதல் ஆணை நமதே''

சம்பந்தர் வாழ்வில் தோடுடைய செவியன் பாடிய அவருடைய மூன்று வயதில் இருந்து திருநல்லூர்ப் பெருமணத்தில் இறைவன் சோதியுடன் கலக்கும்வரை சைவ சமயத்தின் பெருமையை விளக்கும் வகையில் எண்ணற்ற அற்புதங்கள் நிகழ்ந்துள்ளன. அவற்றில் சில காண்போம்.

## ஞானப்பாலுண்டமை :

சீர்காழியில் அவதர்த்த சம்பந்தப் பெருமான் திருத்தோணிபுரத்தில் குளத்தில் மூழ்கிய தந்தையைக் காணாது கோயில் கோபுரத்தைப் பார்த்து, அம்மையே அப்பா என அழுதார். அம்மையும் அப்பனும் விடை மீதேறி அவருக்குக் காட்சி கொடுத்தனர். அம்மையிடம் ஞானப்பால் உண்டு அவர் பாடிய பதிகம்.

''தோடுடைய செவியன்விடையேறியோர்
தூவெண் மதிசூடிக்
காடுடைய சுடலைப்பொடி பூசிஎன்
உள்ளங்கவர்கள்வன்
ஏடுடைய மலரான்முனைநாட்பணிந்
தேத்த அருள்செய்த
பீடுடைய பிரமாபுரமேவிய
பெம்மானிவன்றே ''

அம்மையே அவருக்கு ஞானப்பால் ஊட்டி அருள் செய்ததால் பிள்ளையார் ஆளுடைய பிள்ளையாராகி தேவர்களுக்கும், முனிவர்களுக்கும் தெரிவரிய பொருளாகும் ஒப்பற்ற சிவஞான சம்பந்தராயினார். இதைச் சேக்கிழார்

''யாவருக்கும் தந்தையாய்
எனும் இவரிப்படியளித்தார்
ஆவதனால் ஆளுடைய
பிள்ளையாராய் அகில
தேவருக்கும் முனிவருக்கும்
தெரிவரிய பொருளாகும்
தாவில் தனிச் சிவஞான
சம்பந்தராயினார்''

என்று பாடுகிறார்.

### பொற்றாளம் பெற்றமை :

சீர்காழிக்கு அருகில் உள்ள திருக்கோலக்காவில் எழுந்தருளியுள்ளஇறைவனைவணங்கிப் பாடினார்.

'மடையில் வாளை பாயமாதரார்
குடையும் பொய்கைக் கோலக்காவுளான்
சடையும் பிறையும் சாம்பற்பூச்சுங்கீழ்
உடையும் கொண்ட உருவமென்கொலோ''

என்றபாடலைப்பாடித் தமது திருக்கரங்களால் தாளமிட்டார். இறைவன் கருணையால் திருவைந்தெழுத்து எழுதிய பொற்றாளம் அவருடைய திருக்கரத்தில் வந்தது.

### முத்துச்சிவிகை :

சம்பந்தர் பாதம் நோக நடந்து வருவதைக் கண்டார் திருவரத்துறை இறைவன். முத்துச் சிவிகையும், முத்துக்குடையும், முத்துச் சின்னங்களும் அவருக்கு அருள வேண்டி அடியார்கள் கனவில் தோன்றி 'ஞானசம்பந்தன் நம்பால் வருகின்றான். அவனுக்கு முத்துச் சிவிகைகொண்டுபோய் தாருங்கள்'' என திருவாய் மலர்ந்தருளினார். ஞானசம்பந்தருக்கும் முத்துச்சிவிகையூர்ந்து வருக என அருள்புரிந்தார்.

'சோதிமுத்தின் சிவிகை சூழ் வந்துபார்
மீது தாழ்ந்து வெண்ணீற்றொளி போற்றிநின்
றாதியார் அருளாதலின் அஞ்செழுத்
தோதியேறினார் உய்யஉலகெலாம்''
—சேக்கிழார்.

### ஆசையை விரட்டுவீர் ...



**ஆசை என்னும் பேயை நாமாக விரட்டா விட்டால், அது நம்மை ஆட்டிப் படைக்கும்.**

- சீவஞானி.

### முயலகன் நோய் நீக்கியமை :

காவிரி பாயும் மழவ நாட்டில் திருப்பாச்சிலாச்சிரமத்தில் கொல்லிமழவன் என்னும் அன்பன் இருந்தான். அவனுடைய புதல்வி கொடிய நோயாகிய முயலகன் என்ற பிணியால் பீடிக்கப்பட்டு துன்புற்றாள். அந்தச் சமயம் சம்பந்தர் அங்கு எழுந்தருளினார். கொல்லிமழவன் அவர் பாதத்தில் வீழ்ந்து வணங்கி தன் மகளின் நிலையைக் கூறினார். சம்பந்தர்

''துணிவளர் திங்கள் துளங்கி விளங்கச்
சுடர்ச் சடைசுற்றிமுடித்துப்
பணிவளர்கொள்கையர்பாரிடஞ்சூழ
யாரிடமும் பலிதேர்வர்
அணிவளர்கோலமெலாஞ்செய்துபாச்சி
லாச்சிராமத்துறைகின்ற
மணிவளர்கண்டரோ மங்கையை வாட
மயல்செய்வதோவிவர் மாண்பே''

என்ற பதிகம் பாடியவுடன் கொல்லி மழவன் பெற்ற புதல்வி நோய்தீர்ந்து எழுந்தாள்.

### குளிர்ச்சுரம் நீக்கியது :

ஆளுடைய பிள்ளை பலதலங்களை வழிபட்டு திருச்செங்கோட்டையடைந்தார். பனிக்காலம் வந்தது. மக்கள் கொடிய குளிர்க்காய்ச்சல் வந்து துன்புற்றார்கள். சம்பந்தர் இறைவன்மீது திருப்பதிகம் பாடினார்.



''அவ்வினைக் கிவ்வினை யாமென்று
சொல்லும் அஃதறிவீர்
உய்வினை நாடாதிருப்பது உம்தமக்
கூனமன்றே
கைவினை செய்தெம்பிரான் கழல்போற்றுதும்
நாமடியோம்
செய்வினை வந்தெமைத்தீண்டப்பெறா
திருநீலகண்டம்''

என்றபதிகம் பாடியவுடன் மக்கள் அனைவரும் தீயகுளிர்க் காய்ச்சல்நீங்கிச் சுகம் பெற்றனர்.

## உலவாக் கிழிபெற்றமை :

திருவாவடுதுறையில் சம்பந்தர் தங்கியிருந்தார். அவருடைய தந்தை சிவபாத இருதயர் வேள்வி புரியும் காலம் வந்ததால் சீர்காழி செல்ல விரும்பினார். வேள்வி செய்வதற்கு பொருள் தேவைப்பட்டது. திருவாவடுதுறை இறைவனைப் பொருள் வேண்டிப் பாடினார் திருஞான சம்பந்தர்.

''இடரினும் தளரினும் எனதுறுநோய்
தொடரினும் உன்கழல்தொழுதெழுவேன்
கடல்தனில் அமுதோடு கலந்த நஞ்சை
மிடறினில் அடக்கிய வேதியனே
இதுவோ எமையாளு மாறீவதொன்றெமக்
கில்லையேல்
அதுவோ வுன்தின்னருள் ஆவடுதுறையரனே'

என்ற பதிகம் பாடினார். உடனே சிவபூதம் ஒன்று ஆயிரம்பொன் அடங்கிய முடிப்பைத் தந்து இந்த உலவாக் கிழி உமக்கு அமலனார் அருளியது என்று கூறி சம்பந்தரிடம் கொடுத்தது. அந்தக் கிழியை தம் தந்தையிடம் கொடுத்து சிவவேள்விபுரிவீர் என்று திருவாய் மலர்ந்தருளினார் சம்பந்தர்.

## அராவிடம் தீர்த்தருளியது:

திருமருகலில் சம்பந்தர் எழுந்தருளினார். கோயிலின் புறத்தே அமைந்திருந்த மண்டபத்தில் படுத்துறங்கிய வணிகனை அரவம் தீண்டியது. அவன் இறந்தான். வணிகனின் முறைப் பெண் துயரம் கொண்டாள். கன்னி அவள் புலம்பி அழும் அழுகுரல், மருகற்பெருமானை வணங்க வந்த சம்பந்தரின்செவியில் விழுந்தது. பெருமான் அவளிடம் 'உனக்குற்ற துன்பம் என்ன?' என வினவினார். கன்னி தன் குடும்ப வரலாற்றை உரைத்து''இவர் என்முறை மாப்பிள்ளை'' நாங்கள் திருமணம் செய்து கொள்ள வந்தோம். அரவம் தீண்டி இவர் இறந்து விட்டார். எனக்கு அருள் புரியுங்கள்' எனக் கூறி அவர் பாதத்தில் விழுந்து வணங்கினாள். சம்பந்தர் மருகற்பெருமானை நோக்கி

''சடையாயெனுமால் சரண்நீயெனுமால்
விடையாயெனுமால் வெருவாவிழுமால்
மடையார் குவளைமலரும் மருகல்
உடையாய் தகுமோ இவள் உள்மெலிவே''
—2ஆம் திருமுறை

''சடையானை எவ்வுயிர்க்குந்தாயானானைச்
சங்கரனைச் சசிகண்ட மவுலியானை
விடையானை வேதியனை வெண்ணீற்றானை
விரவாதார் புரமூன்றும் எரியச்செற்ற



படையானைப் பங்கயத்துமேவினானும்
பாம்பணையில் துயின்றானும் பரவுங்கோலம்
உடையானை உடையானே தகுமோஇந்த
ஒள்ளிழையாள் உள்மெலிவு என்றெடுத்துப்
பாட''

என்று பாடியவுடன் விடந்தீர்ந்து வணிகன் எழுந்தான். இருவருக்கும் திருமணம் செய்வித்தார். இந்தத் திருமண நிகழ்ச்சியை தெய்வச் சேக்கிழார்

''பொங்குவிடம் தீர்ந்தெழுந்து நின்றான்
சூழ்ந்த
பொருவில் திருத்தொண்டர்குழாம்பொலிய
ஆர்ப்ப
அங்கையினை உச்சியின்மேல் குவித்துக்
கொண்டங்கு
அருட்காழிப்பிள்ளையார் அடியில்வீழ்ந்த
நங்கை அவள்தனை நயந்தநம்பியோடு
நானிலத்தில் இன்புற்று வாழும்வண்ணம்
மங்குல்தவ சோலைமலி புகலிவேந்தர்
மணம்புணரும் பெருவாழ்வு வகுத்துவிட்டார்''

எனப்போற்றிப் பாடுகிறார்.

### படிக்காசு பெறுதல் :

சம்பந்தரும், நாவுக்கரசரும் திருவீழிமிழலையில் தங்கியிருந்தபொழுது பஞ்சம் தோன்றியது. இறைவன் அவர்களுடைய கனவில் தோன்றி உலகில் ஏற்பட்டுள்ள கொடிய பஞ்சமும், பசித்துன்பமும் நீங்க நாள்தோறும் பொற்காசு வழங்குவதாகத் திருவருள் புரிந்தார். திருஞான சம்பந்தருக்கு வழங்கப் பட்ட பொற்காசு வாசியுடையதாக இருந்தது. திருஞான சம்பந்தர்

'வாசிதீரவே காசு நல்குவீர்
மாசின் மிழலையீர் ஏசலில்லையே'

என்னும் பதிகம் பாடினார். இறைவன் திருவருளால் வாசி தீர்ந்த படிக்காசு பெற்று அடியார்களுக்கு அமுது படைத்தருளினார்.

### திருக்கதவம் அடைத்தல் :

திருமறைக் காட்டுத் தலத்துக் கோயிலை வணங்க ஆளுடைய அரசும் ஆளுடைப்பிள்ளையும் எழுந்தருளினர். அக்கோயிலின் வாயிற் கதவுகள் திறக்கப்படாமல் இருந்ததை அறிந்து அவர்கள் பதிகம் பாடினர். கதவு திறக்கவும், அடைக்கவும் வேண்டிப் பதிகங்கள் பாடினர். திருமறைக்காட்டில் வீற்றிருக்கும் வேதாரண்யேசுவரரை வணங்கி திருஞானசம்பந்தர்

''சதுரம் மறைதான் துதிசெய்து வணங்கும்
மதுரம் பொழில்சூழ்மறைக்காட்டுறைமைந்தா
இதுநன்கிறைவைத்தருள் செய்க எனக்குன்
கதவந்திருக்காப்புக் கொள்ளுங்கருத்தாலே''

என்ற பாடல் பாடியவுடன் கதவு மூடியது.

### வெப்பு நோய் தீரல் :

மதுரையில் பாண்டிய மன்னன் சமணத்தின் மீது பற்றுக் கொண்டிருந்தான். சமணர்



களின் செல்வாக்கு ஓங்கியிருந்த வேளையில் ஆளுடையபிள்ளைபாண்டிமாதேவியின்வேண்டுகோளை ஏற்று ஆலவாய் நகருக்கு எழுந்தருளினார். அவர் தங்கியிருந்த மடத்திற்கு அரசனின் ஆணைப்படி சமணர்கள் தீ வைத்தனர். ஆலவாய் அண்ணலை நோக்கி:

'செய்யனே திருஆலவாய் மேவிய
ஐயனே அஞ்சே லென்றருள் செய்யெனைப்
பொய்யராம் அமணர் கொளுவுஞ்சுடர்
பையவே சென்று பாண்டியற்காகவே''

எனத் தொடங்கும் பதிகம் பாடினார். மன்னனுக்கு உடல் முழுவதும் வெப்புநோய் பரவியது. சமணர்கள் எவ்வளவோ முயன்றும் அரசனின் நோய் நீங்கவில்லை. சம்பந்தர் இறைவனை நோக்கித் திருநீற்றுப் பதிகம் பாடினார்.

'மந்திரமாவது நீறுவானவர் மேலது நீறு
சுந்தரமாவது நீறு துதிக்கப்படுவது நீறு
தந்திரமாவது நீறு சமயத்திலுள்ளது நீறு
செந்துவர்வாயுமை பங்கன் திருஆலவாயான்
திருநீறே''
2-ஆம் திருமுறை

என்று தொடங்கிப் பதிகம் பாடினார். மன்னனின் வெப்புநோய் நீங்கியது. சமணர்களை அனல்வாதம், புனல்வாதம் இவற்றில் வெற்றி கண்டார். மன்னன், சம்பந்தரின் பாதம் பணிந்து சைவ சமயத்தில் சேர்ந்தான்.

## ஆண் பனை, பெண் பனையாதல்:

சம்பந்தர் செய்யாற்றங்கரையில் உள்ள திருவோத்தூர் என்னும் திருத்தலத்தில் இருந்த போது தொண்டர் ஒருவர் அவர் திருவடிகளை பணிந்து அடியேன் வளர்த்த பனை மரங்கள் எல்லாம் ஆண்பனைகளாக அமைந்து காய்த்தலின்றி நிற்கின்றன. சமணர்கள் யாவரும் இந்தப் பனைகள் காய்க்கும் தன்மை உம்மால் நிகழுமோ என ஏளனம் செய்கின்றனர். திருவருள் புரியுங்கள் என வேண்டி நின்றார். சம்பந்தர் இறைவனை வணங்கி

''குரும்பை ஆண்பனைஈன் குலையோத்தூர்
அரும்பு கொன்றை அடிகளைப்
பெரும்புகலியுள் ஞானசம்பந்தன் சொல்
விரும்புவார் வினை வீடே''

என்று பாடிய அளவில் அந்த ஆண் பனைகள் யாவும் பெண் பனைகளாகிப் பூத்துக்காய்த்துக் கனிகளை உதிர்த்தன.

## எலும்பு பொற்பாவையாதல்:

திருமயிலாப்பூரில் சிவநேசர் என்னும் ஒரு வணிகர் இருந்தார். அவரின் அன்புச் செல்வி பூம்பாவை. 'காழிவேந்தராம் கவுணியர் பெருமானுக்கு'அடியேன், எனது மகளையும் செல்வத்தையும் தந்தேன்' என மக்களறியச் சொன்னார் சிவநேசர். பூம்பாவை நந்தவனத்தில் பூக்கொய்யும் பொழுது பூ நாகம் தீண்டி இறந்தாள். அவளை எரித்து சாம்பலையும்

எலும்பையும் குடத்திலிட்டு இவள் சம்பந்தருக்கே உரியள் எனப் பாதுகாத்து வந்தார். காழியர் பெருமான் மயிலாப்பூர் இறைவனை வணங்க எழுந்தருளினார். சிவநேசர், அவர் திருவடியை வணங்கி நிகழ்ந்தவற்றைக் கூறிக் குடத்தை அவர் முன்வைத்தார். பெருமான், கபாலீசுவரரையும், கற்பகாம்பிகையையும் வணங்கி

''மட்டிட்ட புன்னையங் கானல்மட மயிலைக்
கட்டிட்டங் கொண்டான் கபாலீச்சரம
மர்ந்தான்
ஒட்டிட்ட பண்பின் உருத்திரபல்கணத்தார்க்
கட்டிட்டல் காணாதேபோதியோபூம்பாவாய்''

என்று தொடங்கிப் பதிகம் பாட பூம்பாவை குடத்தினின்று தோன்றினாள்.. அடியார்களும் தேவரும், முனிவரும் பூமழை பொழிந்தார்கள்.

### சோதியில் கலத்தல் :

சம்பந்தருக்குப் பெற்றோர் திருமண ஏற்பாடுகளைச் செய்யத் தொடங்கினர். நம்பியாண்டார் மகளை மணம் பேசினர். மண நாள் வந்தது. சடங்குகள் நடந்தன. பிறவி வித்தாகிய இல்வாழ்க்கை சூழ்ந்து கொண்டதே என எண்ணி இனி இவளோடும் சிவன்தாள் சேர்வேன் என உறுதி கொண்டார் சம்பந்தர். திருப்பெருமணக்கோயிலை அடைந்தார். பிறவிப்பாசத்தை நீக்குமாறு இறைவனிடம்

''கல்லூர்ப் பெருமணம் வேண்டா கழுமலம்
பல்லூர்ப் பெருமணம் பாட்டுமெய்யாய்த்தில
சொல்லூர்ப்பெருமணம் சூடலரேதொண்டர்
நல்லூர்ப் பெருமணம் மேய நம்பனே''

எனத் திருப்பதிகம் பாடினார்.

இறைவன் சோதியாக விளங்கி ''சம்பந்தனே நீயும் நின்மனைவியும் மணம் காணவந்தோரும் சோதியினுள் வருக'' எனக் கூறி வாயிலைக் காட்டியருளினன். சம்பந்தர் இறைவனுடன் சோதியில் கலந்த செய்தியினைக்

''காதலியைக் கைப்பற்றிக்கொண்டு வலஞ்
செய்தருளித்
தீதகற்ற வந்தருளும் திருஞான சம்பந்தர்
நாதன் எழில் வளர் சோதி நண்ணியதனுட்
புகுவார்
போதநிலை முடிந்த வழிப்புக்கொன்றியுடனா
னார்''

எனச் சேக்கிழார் பாடுவார்.

### நமச்சிவாயப் பதிகம்

இறைவனின் திருவைந்தெழுத்தைஉள்ளம் உருகி ஓதினால் அது நம் வாழ்க்கையை உய்விக்கும் என்பதை

''காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி
ஓதுவார் தமை நன்னெறிக்குய்ப்பது
வேதம் நான்கினும் மெய்ப்பொருளாவது
நாதன் நாமம் நமச்சிவாயவே''

என்று பாடுகிறார்.



**மனமே எல்லாம். ''இது சுத்தமானது இது அசுத்தமானது'' என்பதை மனத்தினாலேயே ஒருவன் உணர்கிறான். பிறரிடத்துக் குற்றம் காணும் ஒருவன், முதன் முதல், தன் மனத்தையே மாசு படுத்திக் கொள்பவன் ஆகிறான்.**

**—சுவாமி விவேகானந்தர்.**


### பக்திக்கு வித்து :

வாழ்விலே நல்லவற்றையே நினைத்து, நல்லசொற்களையே சொல்லி நல்ல வண்ணம் நன்றுடையானாக இருக்கின்ற இறைவனை வாழ்த்தி வணங்குதலே பக்திக்கு வித்தாகும் என்பதை

''ஓல்லையாறியுள்ள மொன்றிக் கள்ள
மொழிந்து வெய்ய
சொல்லை யாறித் தூய்மை செய்து
காமவினைய கற்றி
நல்லவாறேயுன்றனாமம்நாவினால்நவின்றேத்த
வல்லவாறேவந்து நல்காய்வலிவலமேயவனே''
என்று பக்தி வாழ்க்கையின் உன்னத இயல்பினைப் பாடியுள்ளார்.

வேதநெறி தழைத்தோங்க மிகுசைவத்துறை
விளங்கப்
பூதபரம்பரைபொலியப் புனிதவாய்
மலர்ந்தழுத
சீதவளவயற் புகலித் திருஞான சம்பந்தர்
பாதமலர் தலைக் கொண்டு திருத்தொண்டு
பரவுவாம்''

— — —



# ஓங்கி உலகளந்த உத்தமன்

அமரர்
நா. வேணுகோபால நாயகர்

கோதைத் தமிழ் பாதகங்கள் தீர்க்கும். மேலும் பரமனடி காட்டும். இது பெரியோர் வாக்கு. பாதகங்களைத் தீர்க்கின்ற பரமர் அடி காட்டும் என்றும் கொள்ளலாம்.

ஆண்டாள் அருளிச் செய்துள்ள பாக்களில் உள்ள ஞானம், இறைவனுடைய திருவடித் தாமரைகளை பக்தர்களுக்குக் காட்டித் தரும் என்பது பொருளான பொருள்; சூடிக்கொடுத்த சுடர்க்கொடி தன் பாசுரங்களில், எம்பெருமானுடைய திருவடிகளைச் சுட்டிக் காட்டிப் பேசுவதைப் பார்க்கலாம். இங்ஙனம் 'பரமனடி காட்டும்' பாவையின் பாக்களில் ஒன்றை, திருப்பாவையில் ஒரு பாசுரத்தைத்தான் இந்தக் கட்டுரையின் விஷயமாக அமைத்துக் கொள்ளலாம்.

மார்கழித் திங்கள் மதி நிறைந்த நன்னாளில், வையத்து வாழ்வோர்களை ஆண்டாள் அழைப்பது எதற்காக? 'நாங்கள் நம்பாவைக்குச் சாற்றி நீராட' என்பதே ஆண்டாள் தெரிவிக்கும் காரணம். இந்நீராட்டத்தால் நீங்காத செல்வம்நிறையுமாம். ஆனால்ஒரு நிபந்தனை. நீராடும்போது 'ஓங்கி உலகளந்த உத்தமன்' பேர் பாடி ஆடவேண்டுமாம். இல்லையானால் அந்த செல்வம் நிறையாதாம், நீங்காததாகவும் இருக்காதாம்.

நிறைந்த செல்வம் வேண்டுமென்றால், மிக நிறைந்த செல்வரிடம் போய்க் கேட்க வேணும். ஆனால், ஓங்கி உலகளந்தவரிடம் சென்றால், அவர் 'வாமனர், பச்சைப் பசுந் தேவர். பண்டு நீரேற்ற பிச்சையல்லவா? நமக்குப் பச்சையாகத் தெரிகிறது. இப்பொல்லாக் குறளுருவாய்ப் பொற்கையில் நீரேற்ற வரிடம் போய் நாம் கையேந்துவதா! நீங்காத செல்வம் நமக்கு நிறைவதற்கு.

இவரைப் பாடிக் கேட்பது இருக்கட்டும். இவரிடம் உள்ள செல்வம் அல்லது இவர் அளந்து கொண்ட 'எல்லா உலகும்' எப்படிக் கிடைத்தது! 'மின்' கொள்சேர் புரிநூல் குறளாய் வேஷம் தரித்துக் கொண்டு, 'அகல் ஞாலம் கொண்ட வன்கள்வன் என்பதுதானே குருகூர்ச் சடகோபருடைய கூற்று. இவ் வன் கள்வனிடம் நீங்காத செல்வம் பெறவா நாம் மார்கழி நீர் 'ஆட' வேண்டும்.

இப்படி ஆடியும் 'பாடி'யும் கேட்கிறோம். நமக்கு என்ன கிடைக்கும்? இவனுக்குக் கொடுத்தவர்கள் என்ன கதியானார்கள் என்பதைப் பார்த்தால் நன்றாக விளங்கிவிடும். 'கொடுத்த 'மாவலியைச் சிறையில் வைத்த தாடாளன் இந்த தாராளன்!' என்று மங்கை மன்னன் சங்கையில்லாமல் கூறுகிறார்.

எப்படி இருக்கிறது விஷயம்? இவரைப் பற்றி என்ன நினைக்கலாம்!. இப்படிப் பட்ட வரை ஆண்டாள் அறிமுகப்படுத்துகிறாள் 'ஓங்கி உலகு அளந்த உத்தமன் என்று' இது சரியா? பார்க்கலாம்.

விஷ்ணுவின் அடியைப் பற்றிய இக்கதை வைணவத்தின் அடிப்படியான கொள்கையை விளக்குகிறது. வேதங்களில் இறைவனுடைய ஸ்வரூப ரூப குணங்களைக் கூறும் பாகத்திற்கு

பிரம்ம காண்டம் அல்லது உபநிஷத் என்று பெயர். உபநிஷத்துக்களை சந்தேகமில்லாமல் அறிந்து கொள்ள வியாச முனிவர் சூத்திரங்கள் இயற்றினார். இச் சூத்திரங்களுககும் பிற்காலத்தில் உரை எழுத வேண்டியதாயிற்று. சங்கரரும் மத்வரும் இயற்றிய உரையை விட ஸ்ரீராமாநுசர் அருளிய உரையே சிறந்திருந்ததால், அவருக்கு பாஷ்யகாரர் என்ற திருநாமமும் ஏற்பட்டது. வைணவ தரிசனத்தின் அடிப்படையில் வேதங்களை விளக்கியருளியதால், நம்பெருமாளும், ஸ்ரீவைணவ தரிசனத்திற்கு எம்பெருமானார் (ஸ்ரீராமநுசர்) தரிசனம் எனப் பெயரிட்டு நாட்டி வைத்தார்.

ஸ்ரீவைணவ மதம் ஸ்ரீராமாநுசரால் சிறப்பு அடைந்ததற்குக் காரணம். அசித், சித் என்ற இருவகையால் அமைந்த உலகிற்கு, ஈச்வரனே தலைவன் என்றும், உலகம் சரீரமாகவும், இறைவனான விஷ்ணு சரீரியாகவும் இருக்கின்றான் என்றும் விளக்கப்பட்டதுதான். எனவே அசித், சித்சம்பந்தமான உலகின் நிர்வாகனாக இருக்கின்ற விசேஷத்துடன் எழுந்தருளியிருக்கிறவன் இறைவன் ஒருவனே என்பதால், இம்மதம் விசிஷ்டாத்வைதம் என்றும் பெயரிடப்பட்டது. இறைவனும் அழியாதவன்; அவன் உடலான அசித், சித் தத்துவங்களும் அழிவில்லாதன. இவை கால விசேஷங்களில் சுருங்கலாம்; ஆனால் அழியா.

சித், அசித், ஈச்வரன் என்னும் மூவகைப் பிரிவின் மேன்மையையும் காண்போம். உலகை விஞ்ஞான அறிவால் பிரித்தனர் மேலை நாட்டினர். அவர்களும் முப்பிரிவே கண்டனர். ஆயினும் அவர்கள் கண்ட முப்பிரிவு கடினப் பொருள், (Solid) திரவப்பொருள் (Liquid) காற்றுப் பொருள் ( Gas ) என்பவை. இப்பிரிவில் பனிக்கட்டியை நீர்ப்பொருள் பிரிவில் வைப்பதா அல்லது கடினப் பொருள் பிரிவில் வைப்பதா எனச் சங்கடம் ஏற்படுகிறது. இவையல்லாமல், காற்றும் அற்ற நான்காவது வகையான பாழ்வெளியும் ( Vacuum ) உளது. கடினப் பொருள், நீர்ப்பொருளாக உருக்கப் பெற்று, அதுவும் ஆவியாக்கப்பட்டு, அந்த ஆவியும் வெளியேற்றப்பட்டு பாழ்வெளி ஏற்படும். ஆனால், சித்தும், அசித்தும் ஈத்வரனிடம் புகுந்து ஐக்கியம் ஆனாலும், தனித்தே சிறு அளவுகளிலாவது இயங்கும். இறைவனும் வேறு பொருளாக மாறுவதும் இல்லை. மறைவதும் இல்லை. காற்று மறைந்து நான்காவதான பாழ்வெளி ஏற்படுவது போல. எனவே வைணவ மதத்தின் அடிப்படையாக விளங்கும் மெய்ஞ்ஞானப் பிரிவின் மேன்மை விளங்குகிறதல்லவா!

முன்னம் குறள் உருவாய் மூவடி மண் கொண்டளந்த மன்னன் சரிதையை எல்லோரும் அறிவார்கள்; திரும்பச் சொல்ல வேண்டியதில்லை. ஆனால் ஆராய்வோம். இது தத்துவார்த்தக் கதை அல்லவா! உலகில் அசித் என்னும் எல்லா உயிரற்ற அசையாப் பொருள்களுக்கும், சித் என்னும் உயிருள்ள அசையும் பொருள்களுக்கும் தலைவனாகி விட்டபடியால் மகாபலி, சக்ரவர்த்தி எனப் பெயர் பெறுகிறான். இரணியனுக்கும் இராவணனுக்கும் இப்பட்டம் கிடையாதே. மகாபலியின் குலம் தான் அசுரகுலம். குணம் அசுரகுணம் அல்ல. அவன் செய்தொழில் வேற்றுமையால் சிறப்படைகிறான். அதாவது பொறுப்புகளையும் உயர்ந்தோருக்கு வழங்கி விடவே யாகம் ஆரம்பிக்கிறான். இந்த யாகம் தியாகம் தானே!

## நூல் மதிப்புரை

நூல்பெயர்: வாழ்வில் வைணவம்
நூலாசிரியர்: நா. வேணுகோபால் நாயகர்
வெளியீடு: நாராயண தனம்
ஏ.ஜி.43, அண்ணா நகர், சென்னை-40
பக்கங்கள்: 416. விலை: 40.

நம்முடைய திருக்கோயில் இதழில் தலைசிறந்த வைணவ சமயக் கட்டுரைகளை வழங்கி வந்த பெருந்தகை அமரர் நா.வேணுகோபால் நாயகர் ஆவார். மிகச்சிறந்த வைணவச் சான்றோராக விளங்கிய அமரர் நா. வேணுகோபால் நாயகர் அவர்களின் 19 மிகச் சிறந்த கட்டுரைகள் தொகுக்கப்பட்டு 'வழிகாட்டும் வைணவம்' என்னும் தலைப்பில் வழங்கப்பட்டிருப்பது போற்றுதலுக்குரியது.

(1) பாம்பின் கால் பாம்பறியும், (2) பதின்மர் நாடும் பெருமாள், (3) ஸ்ரீ ஆண்டாளும் கோவிந்தனும், (4) திருப்பாவைக் கோவிந்தன், (5) வையத்து வாழ்வீர்கள் வணக்கம் வணக்கம், (6) அண்ணல் அமுதம் (7) ஆண்டவன் கட்டளை ஆறு, (8) இலட்சுமண முனி, (9) எட்டும் வீழ்ந்ததே. கட்டும் அவிழ்ந்ததே, (10) மொழி விளக்கு, (11) பாவை விளக்கு, (12) நாமசங்கீர்த்தன நங்கை (13) ஓங்கி உலகளந்த உத்தமன், (14) ஊழி முதல்வர், (15) மடல் ஊர்தல், (16) அவளும் இவளும், (17) மார்கழி நீராட மகிழ்ந்து, (18) அப்பனும் ஆசாரியரும், (19) திருமலை ஆகிய பத்தொன்பது கட்டுரைகள் ஒவ்வொன்றும் பாற்கடல் அளித்த தேவாமிர்தமாகத் தித்திக்கின்றன. பரிசுக்கும் பாராட்டுக்கும் உரிய நன்னூல்.

நூலாசிரியரின் வாதத்திறமைக்கு-ஆய்வுப் புலமைக்குச் சான்றாக 'ஓங்கி உலகளந்த உத்தமன்' எனும்இக்கட்டுரை இங்கு எடுத்து 'திருக்கோயில்' வாசகர்களுக்கு அமுதமாக வழங்கப்பட்டுள்ளது.

ரூ. 40 மட்டுமே உள்ள இந்நூலை அனைவரும் வாங்கிப் பயன் பெறலாம்.

நூலை வேண்டுவோர் நாடவேண்டிய முகவரி: திருமிகு வே. இராசநாராயணன்
பி.ஏ.பி.எல்.
செயலாளர்
வைணவ மகாசங்கம்,
நாராயண தனம்,
ஏ. ஜி. 43, அண்ணாநகர், சென்னை-40.

தேவர்கள் உயர்ந்த ஞானம் படைத்தவர்கள்; இவர்களுக்குத் தெரிந்துவிட்டது. மகாபலிச் சக்ரவர்த்திக்கு ஒரு விஷயம் தெரியவில்லை என்று. உலகில் அசித், சித் என்று இரண்டு வகுப்புகளே இருப்பதாயும். அவைகளை ஆட்சி செய்யவும, வழங்கவும் அதிகாரமுள்ளவன் தானே என்றும் தவறாக மகாபலி நினைத்து யாகதானம் செய்வதை செயல் நன்றாகத் திருத்திப் பணி கொள்ள வேணுமென்று திருமாலிடம் முறையிட்டனர். மூன்றாவது பிரிவான ஈச்வரன் உண்டு என்பதையும் உயர்வு அற உயர்நலம் உடையவனே சர்வாதிகாரியும் சர்வரட்சகனும் என்னும் மயர்வறும் மதிநலத்தை அருளவே அயர்வு அறும் அமரர்கள் அதிபதியான இறைவனும் தன் துயர் அறு சுடர் அடிகளால் நடந்து, கண்டவர் தம் மன மகிழ மாவலி தன் வேள்விக் களவில் தன் மனத்தால் தொழுது எழுவதற்காக மிகு சிறு குறளாய் எழுந்தருளினன்.

மாமாயன், மாதவன், வைகுந்தன், அண்டத்து அமரர்கள் சூழ அத்தாணியுள் அங்கிருந்து, தொண்டர்கள் நெஞ்சு உறைவதற்காக, உண்டியே உடையே உகந்து ஓடும் இம்மண்டலந் தன்னில் வருவதே அவதாரம் எனப்படும். வானிளவரசு, வைகுந்தக் குட்டன், மண்ணில் நடந்து மாவலி வேள்வியில் மாண் உருவாய்ச் சென்று மண்ணுலக பாஷையிலேயே பேசி, ‘மூ அடி தா’ என்று இரக்கின்றான். மாவலி இசைகிறான். தன் அறிவின் அடிப்படையிலே ஒருகுறளாய் இரு நிலத்தில், மூ அடி வேண்டிய இறைவனோ உலகனைத்தையும் தன் ஈரடியால் ஒடுக்க ஆரம்பிக்கிறான். அதாவது தன்னுருவாய் நின்று தன் தளிர்புரையும் திருவடிகளைத் தொழிற்படச் செய்து முதலில் அசைவு அற்ற அசித் மயமான சங்கமப் பொருள்களையும், பிறகு இரண்டாவது அடியால் அசைகின்ற ஞானசம்பந்தம் ஏற்படக்கூடிய சித் மயமான தாவரப் பொருள்களையும் உள்ளடக்கிக் கொண்டு மூன்றாவது அடிக்குப் பொருளாக ‘மற்றும் ஒன்றும் தருக’ எனக் கேட்கிறான். ஸ்ரீவைணவ ஞானத்தின் அடிப்படையாக விளங்கும் முப்பிரிவுகளில் மாவலி உணர்ந்துள்ள அசித், சித் என்பவை தான் என்றும், மூன்றாவதான இறைவனை இன்னும் உணரவில்லையே அடையவில்லையே. அதைத் தர முடியுமா என்றான். இந்த நிலையில், ஒண் மிதியில் புனல் உருவி ஒருகால் நிற்கிறது. மற்ற ஒரு காலும் எண்மதியும் கடந்து அண்டமீது போகி, இரு விசும்பின் ஊடுபோய், எழுந்து, மேலைத் தண்மதியும் கதிரவனும் தவிர ஓடித் தாரகையின் புறம் தடவி, அப்பால் மிக்கு மண் முழுதும் அகப்படுத்துகின்றது. (பக்தர்களால் விரும்பப்படும் சீர்மையை உடைய) காமரு சீர் அரசர் குலத்தவனான மாவலியினுடைய அவுணன் உள்ளமும், இதை உணர்ந்ததும் இவை எந்தை, தந்தை தந்தையின் மலர்புரையும் திருவடியே என வணங்குகின்றன.

தானே சர்வாதிகாரி என்றும், தானே ரட்சகன் என்றும் வஞ்ச முக்குறும்பாம் குழியில் கிடந்த மாவலியின் குறும்படக்கிய குறட்பிரமசாரியை, முதலில் ஊனக் கண்ணால் கண்ட

---

## பெருமைமிக்க காரியங்கள் செய்திடுக....

**செயற்கரிய செய்வார் பெரியர் சிறியர்**
**செயற்கரிய செய்கலா தார்.** —குறள்.

---

போது மாணிக்கக் குறளனாகக் காணப் பட்டான்; அசித், சித் சொரூபமான வையம் அளந்தானாகக் (தன் நிர்வாகத்தில் அடக்கிக் கொண்டவனாக) சேவை சாதித்ததை ஞானக் கண்ணால் கண்டபோது, அம்பரம் ஊடறுத்து ஓங்கி உலகளந்த உம்பர் கோனாகக் காணப் பட்டான். தொழுநீர் வடிவில் குறள் உருவாய் வந்து தோன்றியவனின் உண்மை சொரூபத்தை உணர்ந்த போது, (பெருமை பொருந்திய) மாண்பமை கோலமும் மாயமும் தானே வந்து ஆட்கொள்ளும் (ஆச்சரியமான) குணமும் வெளிப்பட்டது. சாமானிய மனிதக் காலால் வெறும் மண்ணை அளந்து கொள்ள வந்த யாசக பிரம்மசாரி அல்ல இவன்; சித், அசித் மயமான இரு பிரிவுகளையுமே தன்னுள்ளடக்கிக் கொண்டு மூன்றாவது பிரிவான ஈச்வரனைத் தர முடியுமா எனக் கேட்டான். மாவலி ஈச்வரத் தன்மையை உணராமலும், அந்த ஈச்வரனே ரட்சகர், அவனே சர்வாதிகாரச் சக்கரவர்த்தி (சக்கரத்து ஐயர்) என்பதை அறியாமலும் வாழ்ந்த தன் வாழ்வுக்கு மிக வருந்தி, பழுதே பலகாலும் போயின என்று அஞ்சி அழுது, இறைவனைக் காண வேணுமென்று துடித்தான். இறைவனும் இதோ நான் அப்பன் என்று ஊழி யெழ உலகம் (ஆட்) கொண்டவாறாக, ஆழி எழச், சங்கும் வில்லும் எழத் திசை வாழி எழத், தண்டும் வாளும் எழ அண்டம் மோழை எழ, சேவை சாதித்தான்; சந்தர்ப்பத்தை நழுவவிடாமலும் இரணிய இராவணர் போல் எதிர்க்காமலும் தன்னையும் ஆட்கொள்ள மாவலி பிரார்த்திக்கவும், அவன் முடியின்மேலும் பாதம் எழுந்தருளியது.

விண்ணவர்கோன் வெந்திறல் வாணன் (மாவலி) வேள்வி இடம் எய்தி அங்கோர் குறளாகி வந்த தன் மெய்மையை மாவலி உணரவும், அச் செங்கண்மால் செந்தொழில் வேத நாவில் முனியாகி வையம் அடிமூன்று இரந்து பெறினும் அவனது அந்தரம் மீது போகி மதி நின்று இறைஞ்ச, மலரோன் வணங்க வளர் சேர், அந்தரம் ஏழினூடு செல உய்த்த பாதத்தைச் சேவித்து.‘அது நம்மை ஆளும் அரசே!’ என்று பணிந்தான். தானவன் வேள்வி தன்னில் தனியே குறளாய் நிமிர்ந்து வானமும் (சித்தும்) மண்ணும் (அசித்தும்) அளந்த திரிவிக்கிரமனின் தாள்களில் மாவலியும் ‘எற்றைக்கும் ஏழேழ் பிறவிக்கும் உன்தன்னோடு உற்றோமே யாவோம், உனக்கே நாம் ஆட்செய்வோம்’ என்று பணிந்தான். அவனுக்கே முதலாவது (ஸ்ரீ சடகோபன்) திருவடி மரியாதை சாதிக்கப் பட்டது. மாயோனை வாள்வலியால் மந்திரங் கொண்டார் மங்கையர்கோன், தாள்வலியால்

தந்திரத்தால் தாடாளன். இங்ஙனம், மாவலியை வலியச் சென்று ஆட்கொள்ள இறைவன் கொண்டது தூயவரி உருவமான குறட்கோலம்தான் என்று காண்கிறார். ட்சித்தும் ஈச்வர ஞானச்சுடர் கொளுந்தியும் 'வசை அறு குறளாய் மாவலி வேள்வியில் மண்ணளிட்டவன் தன்னை அசைவறும் அமரரும் அடியினை வணங்கினார்' களாம். வேறுவிதமாக குற்றச் சாட்டவாவது,பேச்சு மூச்சாவது, இனி? பரமபத இருப்பையும், தன் சுவாமித்துவப் பெருமையையும் விட்டு விபவமான அவதாரத்தை ஏற்று, தன் வாச்சல்ய சௌசீல்ய, சௌலப்ய குணங்கள் பிரகாசிக்கும்படி கிடைத்தற்கரிய திருவடியை இறைவன் தன் சிரசில் வைத்தருளவும் மகாபலி மிகவும் நீர்ப் பண்டமாக உருகி மிகமிகத் தாழ்ந்து அடிமையானான். இதனையே அவன் பாதாளத்திருப்பதாகக் குறிப்பிடுவதாகும்.

மகனான பிரகலாதனுக்கு இறைஞானம் ஏற்பட்ட போது தந்தையான இரணியனுக்கு அது ஏற்படவில்லை. இங்கே தந்தையான மாவலிக்கு ஏற்பட்ட இறைஞானம் மகனான நமுசிக்கு ஏற்படாமல் போயிற்று. எண்கடந்த யோகினோடு இரந்து சென்று மாணியாய் மண் கடந்த வண்ணனை மதிப்பிடத் தவறினான் நமுசி. ஆட்கொள்ள வந்த அடிகளை, அளந்து கொள்ள வந்தவைகளாகவே மதித்தான். எனவே, 'என்னிது மாயம்? என் அப்பன் அறிந்திலன்; முன்னைய வண்ணமேகொண்டு அளவாய்' என்றான். மாலும் தேடி வந்த இடத்தில் தன் பெருமையைக் காணத் தவறியதால், தன் சொந்த இடமாவது சென்று நிரந்தரமாக்க் காண்பான் என்று 'மன்னு நமுசியை வானில் சுழற்றித்தன் மின்னும் முடியளவு' செலுத்தினான்.

இறைவனது திருவடித் தாமரையை 'என் தலையல்லால் கைம்மாறு இல்லேன்' என்று சென்னியின் மேற் பொறித்துக் கொண்ட மாவலி, சிரஞ்சீவிகளில் ஒருவனாகத் திகழ்கின்றான். பிரகலாத விபீஷண ஆழ்வார்களைப் போலவே மாவலிக்காக அன்று தூக்கிய திருவடியின் சம்பந்தம் வசிஷ்ட-சண்டாள வித்யாசம் இல்லாமல் அனைவரையும் ஆட்கொண்டது. இதனால் உலகம் என்றென்றும் மகாபலிக்கும் கடமைப்பட்டுள்ளது. எம்பெருமானின் தேனே மலரும் திருவடித் தாமரைகளை சென்னிக் கணிந்து கொள்ளும் புனித-புண்ணிய வழக்கம் மாவலியால்தான் முதன் முதலில் ஆரம்பிக்கப் பட்டதாகப் புராண இதிகாசங்களிலிருந்து அறியக் கிடக்கிறது. உடன் பிறந்தோனாகிய பரதாழ்வானுக்குக் கிடைத்த பாதுகாபட்டாபிஷேகத்தை விட மாவலியின் பாதுகாபட்டாபிசேகமே சிறந்ததெனலாம்.

தீங்கின்றி நாடெல்லாம் திங்கள் மும்மாரி பெய்யவும்,கயல் மீன்கள் உகளும்படியும், பூங்குவளைப் போதில் பொறிவண்டு கண்படுக்கும்படியும், பெருஞ் செந்நெல் ஓங்கவும், தேங்காதே புக்கிருந்து சீர்த்த முலைபற்றி வாங்க, வள்ளல் பெரும் பசுக்கள் குடம் நிறைக்கவும், நீங்காத செல்வம் நிறையவும், ஸ்ரீ ஆண்டாள் ஓங்கி உலகளந்தவன் பேர்பாட வேண்டும் பாவை நீர் ஆடவேண்டும் என்கிறார். திங்கள் தோறும் பெய்யும் மும்மாரி, அசித் வகைப்பட்டது. பெருஞ்செந்நெல்லும் அதன் வளப்பத்தைக் குறிக்கும் கயலும், பொறி வண்டும், வள்ளல் பெரும் பசுக்களும் அசித், சித் சேர்க்கை பாலானவை.பாவை நீராடுவோரும் அசித், சித் சம்பந்தமானவர்களே. எனவே, அசித் வளமும், சித் வளமும் உண்டாக வேண்டுமானால் அவைகளில் சரீரியாகவும் அந்தர்யாமியாகவும் உள் நின்று ஆட்சிசெய்யவும், ஆளும் ஈச்வரனான எம்பெருமானைத் தானே பாடவேண்டும். ஓங்கி உலகை ஈரடியால் அளந்து, சித், அசித் என்பவை யாவும் தன் வசப்பட்டதே என்று காட்டி விட்டான் அல்லவா வாமன-திருவிக்கிரமனாக. ஈச்வரனும், ஈச்வர கைங்கர்யமுமே நீங்காத செல்வமும் நிறைந்த செல்வமும், இந்த ஈச்வர சம்பந்தத்தையும் உனக்கே நாம் ஆட்செய்வோம் என்னும் கைங்கரியத்தையும் விரும்பியே ஓங்கி உலகளந்தவர் பேர் பாடுகிறார்கள். பாடிப் பாவை நீர் ஆடுகிறார்கள். மாவலி மறந்திருந்தும் வந்து ஆட்கொண்டான் உத்தமன்தானே. நாம் அவன் பேர் பாடியதும், ஆடியதும் வியாஜ்ஜியமாக நாடெங்கும் நீங்காத செல்வம் நிறைப்பவன் ஓங்கிய உத்தமன் தானே: நம்மிடம் உள்ள பக்தியும், நாம் இயற்றும் கைங்கரியமும் மிக அற்பமாக இருப்பினும் நம்மிடம் நீங்காத செல்வமாக நிறைபவன் ஓங்கி உலகு அளந்த உத்தமனே! எனவே அன்று இவ்வுலகம் அளந்தான் அடிபோற்றி!

வையம் அளந்த மணாளனின் கதையை எப்படி அறிய வேண்டும்? அறிந்து என்ன செய்ய வேண்டும்? அறிந்தறிந்து வாமனன் அடியினை வணங்க வேண்டுமாம். வணங்கினால் செறிந்து எழுந்த ஞானமோடு செல்வமும் சிறந்திடுமாம். ஆண்டாள் திருவுள்ளத்தை இப்படி ஆமோதிக்கின்றார் பக்திசாரர்.

முப்பொருள் உண்மையைக் கூறும் இப்பாசுரம் சித், அசித், ஈச்வரன் என்ற அம் முப்பொருளையும் விவரிப்பதுடன், திருப்பாவையில்மூன்றாவது பாடலாகவும் அமைந்துள்ளது. முதல் பாசுரம் அசித் சொரூபமான மார்கழித் திங்களையும் நீரையும் பற்றிப் பேசுகிறது. இரண்டாம் பாட்டு சித் சொரூபமான வையத்து வாழ்வோர்களை அழைக்கிறது. மூன்றாவது பாட்டான இது, சிகரம் வைத்தாற்போல் ஓங்கி உலகு அளந்த உத்தமன் என்று ஈச்வரனைப் போற்றித் தொடங்குகிறது. அசித், வளங்கள் பெருகுவதும், குறுகுவதும் அவன் திருவடிகள் இட்ட வழக்கே என்றும் காட்டுகிறது.

ஆண்டாளுடைய பக்தி உள்ளத்தில் ஓங்கிய இப்பாடல் வைணவ உலகத்தையே அளந்து விட்டது. ஆம் ஆட்சி செய்கிறது.

— — — —

வெளியிடுபவர் : ஆணையர், தமிழ்நாடு அரசு இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை. சென்னை-600 034.
ஆசிரியர் : கவிஞர் டாக்டர் த. அமிர்தலிங்கம், எம்.ஏ. பிஎச்.டி.
அச்சிட்டோர் : தமிழரசு அச்சகம். அரசினர் தோட்டம். சென்னை-600002.